இணைப்பு 1

2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை

நிறுவனத்தின் பெயர் : தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

செலவுத் தலைப்பு இலக்கம் - 120-01-02-2201

| **உள்ளடக்கம** | **பக்க இலக்கம்** |
|---|---|
| அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தோற்றப்பாடு/ நிறைவேற்றுப் பொழிப்பு | 2 - 12 |
| அத்தியாயம் 02 – முன்னேற்றமும், எதிர்கால நோக்கும் | 12 - 80 |
| அத்தியாயம் 03 – ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை | 81 - 112 |
| அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டி | 113 - 113 |
| அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை | 114 - 115 |
| அத்தியாயம் 06 – மனிதவளங்களின் தோற்றப்பாடு | 115 - 119 |
| அத்தியாயம் 07 – இயைபு அறிக்கை | 120 - 131 |

.

## அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தோற்றப்பாடு /நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 அறிமுகம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டில் சிறுவர்கள் தொடர்பில் அமுலில் உள்ள சட்டக் கட்டமைப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. நாட்டின் சிறுவர்களது உச்சளவான நலனுக்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டிலும் செயற்பட்டது.

1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்' உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.

இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1990 ஆம் ஆண்டு கையொப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. 1991 யூலை மாதம் 12 ஆம் திகதி இது நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன் போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஸ்பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பித்தது. அதற்கமைய 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நீதி அமைச்சரினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இச்சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. 1990 யூன் மாதம் அதிகாரசபையின் தலைவர் மற்றும் நிருவாக சபை நியமனம் செய்யப்பட்டதை அடுத்து அதிகாரசபை இயங்க ஆரம்பித்தது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஸ்ப்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின் போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீள்சமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை

மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகார சபைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகார சபைக்கு அறியக் கிடைக்கும் போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.

சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஸ்ப்பிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம் திகதி "1929" இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் இயங்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஷப்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களின் பாதுகாப்புக்காக இந்த ஆண்டிலும் தேசிய செயற்றிட்டங்களுக்கு அமைய தமது பணிகளை மேற்கொண்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

**நோக்கு**

சிறுவர்களுக்கு சாதகமானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

**செயற்பணி**

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

**பிரதான செயற்பணி**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. குறித்த செயற்பணி பின்வருமாறாகும். (14 ஆம் பிரிவுக்கு அமைய)

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

- அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

- துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும், அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப் பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

- சகல வகையிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.

- சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குறுத்தல்.

- ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின் உடல் மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக் கொள்வதும்.

- குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கும் அரவணைப்புக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.

- சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக் கட்டமைப்பை தயார் செய்வதும், அதனை பேணிவருவதும்.

- சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் அலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குறுத்தல்களும்.

- சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும், மேம்படுத்துவதும், ஒருங்கிணைப்புச் செய்வதும்.

- சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.

- சிறுவர் துஸ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

- சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.

- சகல வகையிலுமான சிறுவர் துஸ்பிரயோகங்களை வெளிப்படுத்திக் கொள்வதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்.

## 2020 ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிறுவன ஒழுங்கமைப்பு



**2020 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை**

| தொடர் இல. | பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவிப் பெயரும், நியமனம் பெற்ற திகதியும் | கடமையாற்றும் இடத்தின் முகவரி |
|---|---|---|---|
| 01 | பேராசிரியர் திரு முதித விதானபதிரன | தவிசாளர் (2020 சனவரி 01 முதல்) | நீதிமன்ற மருத்துவவியல் பற்றிய பேராசிரியர், நீதிமன்ற மருத்துவக் கல்லூரி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், நுகேகொடை |
| 02 | சட்டத்தரணி திருமதி சுஜாதா அழஹப்பெரும (2018 – 2019) | பிரதித் தவிசாளர் (2020 சனவரி 01 ஆம் திகதி முதல்) | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி |
| 03 | திரு ஹேமமால் கஸ்துரிஆரச்சி (அவதானிப்பாளர்) | பணிப்பாளர் நாயகம் (2020 அக்டோபர் மாதம் முதல்) | நிதி அமைச்சு, லோட்டஸ் வீதி, கொழும்பு |
| 04 | டாக்டர் திருமதி சுவர்ணா விஜேதுங்க | சிரேஸ்'ட உளவியல் மருத்துவ நிபுணர் (சிறுவர் மற்றும் இளம்பருவ) (2020 சனவரி மாதம் முதல்) | ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, பொரளை |
| 05 | டாக்டர் திரு சேனக குணதிலக்க | சிரே'ஸ்ட சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர் (2020 சனவரி மாதம் முதல்) | மாவட்ட வைத்தியசாலை, பதுளை |
| 06 | - | உளவியல் மருத்துவர் (வெற்றிடம்) | - |
| 07 | திரு ஜே.ஏ.டி.எம்.பீ.என். ஜயகொடி | பிரதிப் பொலிஸ் மாஅதிபர் (2020 மார்ச் மாதம் முதல்) | பொலிஸ் திணைக்களம், 331, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு |
| 08 | திரு சுசந்த பாலபட்டபெந்தி | மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் (2020 யூன் மாதம் முதல்) | சட்ட மாஅதிபர் திணைக்களம், கொழும்பு 12 |
| 09 | திருமதி சந்திராணி சேனாரத்ன | செயலாளர், (2020 சனவரி மாதம் முதல்) | தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு, அறை இலக்கம் 2-116, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், கொழும்பு 07 |

| | | | |
|---|---|---|---|
| 10 | டாக்டர் திருமதி ஹிரந்தி விஜேமான்ன | சுயாதீன சிறுவர் உரிமைகள் பற்றிய ஆலோசகர் (2020 சனவரி மாதம் முதல்) | |
| 11 | கலாநிதி திரு கபில பண்டார | பீடாதிபதி, கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக் கழகம் (2020 சனவரி மாதம் முதல்) | கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக் கழகம், 94, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு 07 |
| 12 | திரு உதயகுமார அமரசிங்க | சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் (2020 ஜனவரி மாதம் முதல்) | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் கங்கொடவில நுகேகொட |
| 13 | திருமதி சந்திமா சிகேரா | ஆணையாளர் (2020 சனவரி மாதம் முதல்) | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், ஐஐஆம் கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்லை |
| 14 | திரு ஏ. விமலவீர<br><br>திரு பீ.கே. சந்திரகீர்த்தி | தொழில் ஆணையாளர் நாயகம் (2020 சனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை)<br>(2020 நவம்பர் மாதம் முதல்) | தொழில் திணைக்களம், கிருல வீதி, கொழும்பு 05 |
| 15 | திருமதி சுஜீவா பல்லியகுருகே | பணிப்பாளர் (அபிவிருத்தி) (2020 சனவரி மாதம் முதல்) | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு |

**<u>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான சபை உறுப்பினர்கள்</u>**

| தொடர் இல | சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவிப் பெயரும், நியமனம் பெற்ற காலஎல்லையும் | கடமையாற்றும் இடத்தின் முகவரி |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 01 | திருமதி ஹசினி பல்லேவெல | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) (2020 மே மாதம் முதல்) | பாதுகாப்பு அமைச்சு, 15/5, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 03 |
| 02 | திருமதி பி.ஜே.டி. பெர்ணாந்து | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (2020 யூன் மாதம் முதல்) | சமூக சேவைகள் அமைச்சு, செத்சிறிபாய, பத்தரமுல்ல |
| 03. | திரு என்.ஏ.கே. விஜேநாயக்க | சிரேஸ்ட உதவிச் செயலாளர் (2020 யூன் மாதம் முதல்) | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு |
| 04 | திருமதி ரோகினி ஹெட்டிகே | சிரேஸ்ட உதவிச் செயலாளர் (2020 யூன் மாதம் முதல்) | நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, நீதிமன்ற மாவத்தை, கொழும்பு 12 |
| 05 | திருமதி எம்.சீ.எஸ். தேவசுரேந்திர | பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) (2020 மே மாதம் முதல்) | தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, 163, எசிதிசி மெதுர, கிருலபன மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு 05 |
| 06 | திரு கே.பி.என்.ரீ.என். தேவப்பிரிய | சிரேஷ்ட உதவிச் செயலாளர், (நிருவாகம் 1) (2020 யூன் மாதம் முதல் | கல்வி அமைச்சு, பன்னிப்பிட்டிய வீதி, இசுருபாய, பத்தரமுல்ல |
| 07 | திருமதி மாதவீ குணவர்த்தன | ஆணையாளர் (சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு) (2020 மே மாதம் முதல்) | தொழில் திணைக்களம், கிருல வீதி, கொழும்பு 05 |
| 08 | டாக்டர் திரு எச்.எஸ்.ஆர். பெரேரா | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மக்கள் சேவைகள் 11) (2020 யூன் மாதம் முதல்) | சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு, 385, பத்தேகம விமலவங்ச தேர மாவத்தை, கொழும்பு 10 |

| | | | |
|---|---|---|---|
| 09 | திரு சீ.எச். கமகே | சிரே'ஸ்ட உதவிச் செயலாளர்<br>(2020 யூன் மாதம் முதல்) | சுற்றுலா அமைச்சு,<br>2 ஆம் மாடி,<br>51பீ,<br>யோர்க் வீதி,<br>கொழும்பு 01. |
| 10 | - | உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு (வெற்றிடமாக உள்ளது) | - |

**2020 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் பின்வரும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1. தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் அலுவலகம்
2. பணிப்பாளர் நாயகம் அலுவலகம்
3. நிருவாகம் மற்றும் மனித வளப் பிரிவு
4. நிதிப் பிரிவு
5. திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவு
    5.1 திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலகு
    5.2 தகவல் மற்றும் ஊடக அலகு
    - நூலகம்
6. நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு
7. உளவியல் சமூக பிரிவு
8. சட்டப் பிரிவு
9. சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு
    9.1 1929 இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவை
    9.2 மத்திய ஆவணக்காப்பகம்
    9.3 வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு
    9.4 இணையத்தளக் கண்காணிப்பு அலகு

10. உள்ளகக் கணக்காய்வு பிரிவு

11. விசேட பொலிஸ் விசாரணை பிரிவு

1.5 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள்/திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் /மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற பிரதேச செயலகங்கள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பணியை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்துவதற்கு மாவட்ட மற்றும் பிரதேச ரீதியில் அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | 25 மாவட்ட செயலகங்களுக்கும் அலுவலர்களை இணைப்புச் செய்தல் | 331 பிரதேச செயலகங்களுக்கும் அலுவலர்களை இணைப்புச் செய்தல் |
|---|---|---|---|
| 01 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | அலுவலர்கள் - 25 | - |
| 02 | மாவட்ட உளவியல் சமூக அலுவலர் | அலுவலர்கள் - 25 | - |
| 03 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | அலுவலர்கள் - 25 | - |
| 04 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | - | அலுவலர்கள் 331 |
| 2020 இல் அங்கீகரிக்கப்பட்ட மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை | | 406 | |

1.5 அமைச்சு /திணைக்களம் /மாகாண சபையின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் / நிதியங்கள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இவ்வாறான நிதியங்கள் பயன்படுத்தப்படுவதில்லை.

1.7 வெளிநாட்டுக் கருத்திட்டங்களின் தகவல்கள்

கருத்திட்டம் - 01

அ) கருத்திட்டத்தின் பெயர் - 1929 – 24 மணி நேரமும் இயங்கிவரும் சிறுவர் தொலைபேசிச் சேவை தொடர்பான கருத்திட்டம்

ஆ) பங்களிப்பு நிறுவனம் - சார்க் நிதியம்

இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் - ரூ.மி. 7.650

ஈ) கருத்திட்ட காலஎல்லை – 2020 (01 வருடம்)

கருத்திட்டம் - 02

அ) கருத்திட்டத்தின் பெயர் - சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்புக் கருத்திட்டம்

ஆ) பங்களிப்பு நிறுவனம் - சேவ் த சில்ரன் நிறுவனம்

இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம் - ரூ.மி. 1.956

ஈ) கருத்திட்ட காலஎல்லை – 2020 (01 வருடம்)

02 ஆம் அத்தியாயம் - முன்னேற்றமும், எதிர்கால நோக்கும்

2020 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்றிட்டம் 3 திட்டங்கின் கீழ் அமுல்படுத்தப்பட்டது. அதற்காக பின்வருமாறு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கம் செய்யப்பட்டன.

1. தேசிய அபிவிருத்தி செயற்றிட்டம் (ரூ.மி. 38)
2. 1929 எனும் 24 மணி நேரமும் இயங்கிவருகின்ற சிறுவர் தொலைபேசிச் சேவைக்குரிய செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 7.650)
3. சிறுவர்களுக்கான சமூக பாதுகாப்புச் செயற்றிட்டம் (ரூ.மி. 1.956)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பணி 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தினால் தத்துவமுள்ளதாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய செயற்பணியை மேற்கொள்வதற்கு விடய ரீதியான பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகளினால் இலங்கை சிறுவர்களின் உச்சளவான நலனுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் சகல சிறுவர்களுக்கும் சர்வதேச சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு அமைய உரித்தாக வேண்டிய சிறப்புரிமைகள் மற்றும் உரிமைகளுக்குள்ள உரிமை உறுதி செய்யப்படுகின்றது.

சிறுவர்கள் உடல்சார் தண்டனை, உளவியல் அழுத்தம், பாலியல் மற்றும் வேறு வகையிலான துஂஸபிரயோகத்திற்கு, சட்ட விரோத வணிக நடவடிக்கைகளுக்கு சிறுவர்களை பயன்படுத்திக் கொள்வது (சிறுவர் கடத்தல்) சிறுவர் ஊழியர்களாக பயன்படுத்த மற்றும் பாரபட்சம் காட்டலுக்கு ஆளாவதை முற்றாக ஒழிப்பதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்று கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலைகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அது சம்பந்தமான சகல நிறுவனங்களுடனும் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தயார் செய்து அமுல்படுத்துகின்றது.

பாலர் பாடசாலை, பகல் நேர பராமரிப்பு நிலையங்கள் மற்றும் பாடசாலைகளில் சிறுவர்களுக்கு எவ்வகையிலும் பாரபட்சம் காட்டாமை, உடல்ரீதியான அல்லது உளவியல்சார் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்துவதை முற்றாகத் தடுப்பதற்கு பரந்தளவிலான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தத் தேவையான கொள்கைகளை தயார் செய்தல்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கடந்த பல வருடங்களாக சிறுவர்கள் தொடர்பிலான சகல வழக்குகளையும் தீர்த்துவைப்பதை துரிதப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்திலும் ஒரு பகுதியை ஒதுக்குமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

ஏதேனுமொரு காரணத்தினால் சிறுவர்களை வீதிகளில் விட்டுச் செல்லல், கொலை செய்வதைத் தடுப்பதற்காக மேற்படி பிள்ளைகளை தத்தெடுத்துக் கொள்வதற்குள்ள சிக்கலான முறையியலை இலகுபடுத்தும் சகல சிறுவர் இல்லங்களிலும் உள்ள பிள்ளைகளுக்கு ''கெப்பகரு பவுல்'' எனும் பாதுகாவலர் குடும்பங்களை அறிமுகம் செய்யும் தேசிய வேலைத்திட்டத்தை தயார் செய்வதற்கான ஆரம்ப எண்ணக்கரு தயார் செய்யப்பட்டு நீதி அமைச்சரிம் சமர்ப்பிக்கப்பட்டது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் சிறுவர்கள் தொடர்பாக இனங்காணப்பட்டுள்ள நோக்கங்களில் (SDG 4) முழுமையான, நியாயமான தரமான கல்வியை உறுதி செய்தல் மற்றும் சகலருக்கும் ஆயுட் காலம் முழுவதும் கற்றலுக்கான வாய்ப்பை செய்துகொடுத்தல்,(SDG 5) பால்நிலைசார் சமஅந்தஸ்தை அடைந்துகொள்ளல் மற்றும் பெண்கள், பெண் பிள்ளைகளை வலுவூட்டல்,(SDG 8) சகலருக்கும் முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையான மற்றும் விளைதிறன்மிக்க தொழில் மற்றும் கௌரவமான தொழிலை மேம்படுத்தல்,(SDG 10 -1) அநீதி மற்றும் பொருத்தமற்ற சட்டக் கொள்கைகளை ஒழித்து பொருத்தமான சட்ட கொள்கைகளை ஏற்படுத்தல். (SDG 16) நிலைபேறான அபிவிருத்திக்கான அமைதியான மற்றும் சகலரையும் உள்ளடக்கிய சமூகத்தை மேம்படுத்தல், சகலருக்கும் நிதிக்கான அணுகுமுறையை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் விளைதிறன்மிக்க பொறுப்பைக் கொண்ட முழுமையான நிறுவனத்தின் சகல மட்டங்களையும் ஏற்படுத்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக 2020 ஆம் ஆண்டு 03 செயற்றிட்டங்களின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**2020 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி**

| இல. | பதவி | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM -2-1 | 01 | 01 | - |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | HM -1-3 | 01 | - | 01 |
| 03 | பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் மனித வளம் | HM -1-1 | 01 | 01 | - |
| 04 | பணிப்பாளர் - நிதி | HM -1-1 | 01 | - | 01 |
| 05 | பணிப்பாளர் - சட்டம் | HM -1-1 | 01 | - | 01 |
| 06 | உளவியல் சிகிச்சை நிபுணர் | HM -1-1 | 01 | - | 01 |
| 07 | பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | HM -1-1 | 01 | 01 | - |
| 08 | பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 09 | பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | HM -1-1 | 01 | - | 01 |
| 10 | உதவி பணிப்பாளர் - நிருவாகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 11 | உதவி பணிப்பாளர் - சட்டம் | MM -1-1 | 01 | 01 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | உதவி பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | MM -1-1 | 01 | 01 | - |
| **இல.** | **பதவி** | **சம்பளக் குறியீடு** | **அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை** | **சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை** | **வெற்றிடம்** |
| 13 | உதவி பணிப்பாளர் - உளவியல் | MM -1-1 | 01 | 01 | - |
| 14 | உதவி பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | MM -1-1 | 01 | 01 | - |
| 15 | உதவி பணிப்பாளர் - தகவல் மற்றும் ஊடகம் | MM -1-1 | 01 | - | 01 |
| 16 | உதவி பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | MM -1-1 | 01 | - | 01 |
| 17 | கணக்காளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 18 | உள்ளக கணக்காய்வாளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 19 | பணிப்பாளர் சபை செயலாளர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 20 | நிருவாக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 21 | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 22 | கணக்கு அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 23 | புலனாய்வு அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 24 | தகவல் மற்றும் ஊடக அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 25 | திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| **இல.** | **பதவி** | **சம்பளக் குறியீடு** | **அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை** | **சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை** | **வெற்றிடம்** |
| 27 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | MA - 4 | 01 | - | 01 |
| 28 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) | MA - 4 | 01 | - | 01 |
| 29 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 25 | 18 | 07 |
| 30 | மாவட்ட உளவியல் சமூக அலுவலர் | MA - 3 | 25 | 14 | 11 |
| 31 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 360 | 248 | 112 |
| 32 | நிருவாக உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 33 | கணக்குகள் உதவியாளர் | MA - 3 | 03 | 02 | 01 |
| 34 | ஊடக உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 35 | நூலகர் | MA - 3 | 01 | - | 01 |
| 36 | திட்டமிடல் உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 37 | சட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 38 | புலனாய்வு உதவியாளர் | MA - 3 | 02 | - | 02 |
| 39 | ஆலோசனை உதவியாளர் | MA - 3 | 04 | 03 | 01 |
| 40 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 41 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் | MA - 3 | 01 | 01 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உதவியாளர் | | | | |
| **இல.** | **பதவி** | **சம்பளக் குறியீடு** | **அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை** | **சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை** | **வெற்றிடம்** |
| 42 | இணையத்தள பரிசோதனை உதவியாளர் | MA - 3 | 01 | - | 01 |
| 43 | சிகிச்சையளிக்கும் மருத்துவர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 44 | வீடியோ தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 01 | 01 | - |
| 45 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | MA – 2-1 | 15 | 09 | 06 |
| 46 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 02 | 02 | - |
| 47 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) | MA – 1-1 | 32 | 28 | 04 |
| 48 | சாரதி | PL-3 | 07 | 06 | 01 |
| 49 | செய்தி கொண்டுசெல்பவர் (தூதுவர்) | PL-1 | 01 | - | 01 |
| 50 | அலுவலக சிற்றூழியர் | PL-1 | 03 | 02 | 01 |
| 51 | அலுவலக தொழிலாளி | PL-1 | 02 | 01 | 01 |
| **மொத்தம்** | | | **527** | **359** | **168** |

*நிதி அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

**சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான செயற்பணியொன்றான சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையின் வரைவுக்கு 2019.10.29 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய 2020 ஆம் ஆண்டு சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையின் 2000 பிரதிகள் மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டன.




### சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கைக்குரிய ஐந்து வருட செயற்றிட்டத்தை தயார் செய்தல்.

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கான ஐந்து வருட செயற்றிட்டத்தை தயார் செய்வது 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய துறைசார் 10 பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 10 அமைச்சுக்களுடன் இந்தப் பணி மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி அமைச்சுக்கள் பின்வருமாறாகும்.

01. பாதுகாப்பு அமைச்சு
02. நிதி அமைச்சு
03. நீதி அமைச்சு
04. கல்வி அமைச்சு
05. சுகாதார அமைச்சு
06. தொழில் அமைச்சு
07. சுற்றுலா அமைச்சு
08. வெகுசன ஊடக அமைச்சு

09. அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்,உள்ளூராட்சி அமைச்சு

10. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி: சேவைகள் இராஜாங்க அமைச்சு

மேற்படி அமைச்சுக்களுடனான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய நீதி, தொழில், வெகுசன ஊடகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களுடன் 04 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. அதற்கமைய செயற்றிட்டத்தை தயார் செய்யும் போது பயன்படுத்திக் கொள்வதற்காக கொள்கையின் நோக்கங்களை விளக்கும் வகையில் தயார் செய்யப்பட்ட மாதிரியமைப்பு ஒவ்வொரு அமைச்சுக்கும் விநியோகிக்கப்பட்டது. மேலும் கொள்கையை அமுல்படுத்துவதற்கு நீதி, சட்ட மறுசீரமைப்பு, கல்வி, பாதுகாப்பும், சட்டத்தை அமுல்படுத்தலும், சுகாதாரம், சமூக நலன்புரி, தொழில் மற்றும் தொழில்வாய்ப்பு, சுற்றுலா, வெகுசன ஊடகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் அனர்த்தம் மற்றும் சிறுவர் அலுவல்கள் ஆகிய துறைகள் இனங்காணப்பட்டதுடன், அவ்வவ் துறைகளுக்குரிய பருமட்டான உபாயமுறைசார் திட்டங்களை இனங்காண்பதும் மேற்கொள்ளப்பட்டது.





**சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான சட்டங்கள், நடவடிக்கைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை தயார் செய்தல்**

நீதி அமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைய பின்வரும் 05 தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 05 கல்விமான்கள் குழுக்கள் நியமனம் செய்யப்பட்டு சிறுவர் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள், நடவடிக்கைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நீதிமன்ற செயன்முறையுடன் சம்பந்தப்படுகின்ற சிறுவர்கள் முகம் கொடுக்கும் சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் முறையியல்கள் பற்றிய கலந்துரையாடலொன்று 2020.10.02 ஆம் திகதி நீதி அமைச்சரினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதிநிதிகளுடன் மேற்படி அமைச்சில் நடாத்தப்பட்டதுடன், மேற்படி கலந்துரையாடலுக்கு அமைய சிறுவர்கள் தொடர்பில்

காணப்படுகின்ற சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டிய 5 துறைகள் இனங்காணப்பட்டன. அவையாவன,

1. சிறுவர்களுக்கான பல்வேறு சட்டங்களிலும் சிறுவர் எனும் பதத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொருட்கோடலில் வயது பல்வேறுபட்டதாக உள்ளமை. பல்வேறு சட்டங்களிலும் சிறுவர் எனும் பொருட்கோடல் பல விதமாக வரைவிலக்கணம் செய்யப்படுவதன் காரணமாக சிறுவர் என்பதற்கான வரைவிலக்கணத்தின் சட்டரீதியான அந்தஸ்தை பொதுவானதொரு நிலைப்பாட்டுக்கு கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. சிறுவர் துஸ்பிரயோக வழக்குகளுக்கு சிறுவர்களுக்கு சாதகமான நீதிமன்ற முறையியலை அறிமுகம் செய்தல்.
3. சிறுவர்கள் தொடர்பிலான பொலிஸ் விசாரணைகளுக்குரிய வழிகாட்டல்களை அறிமுகம் செய்தல்.
4. வீடியோ சாட்சியங்கள் தொடர்பிலான நடவடிக்கைமுறையை அறிமுகம் செய்தல்.
5. நீதிபதிகளுக்கு சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் சிறுவர் தவறாளிகளுக்கான தண்டனைக் கொள்கை அல்லது தண்டனை வழிகாட்டல்களை தயார் செய்தல்.

மேலும் விடயப்பரப்புக்கள் 05 தொடர்பில் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய 5 துணைக் குழுக்கள் நியமனம் செய்யப்பட்டன.

- குழு உறுப்புரிமை சட்டக் கல்வித் துறைசார் தொழில்வல்லுனர்கள், தனியார் சட்ட தொழில்வல்லுனர்கள், சட்ட மாஅதிபர் திணைக்கள அலுவலர்கள் மற்றும் விடயத்துறைசார் ஏனைய நிபுணர்கள்
- சட்ட மாஅதிபர் திணைக்களத்தினால் 5 குழுக்களுக்கும் பெயர் பிரேரணைகளை பெற்றுக் கொள்ளல்.
- குழுக்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வசதிகளை செய்துகொடுக்கும் பணிகளை சிறுவர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் அரசசார்பற்ற நிறுவனங்கள் 5 இடம் பொறுப்பளித்தல் (மேற்படி அரசசார்பற்ற நிறுவனங்கள் 5 உம் இனங்காணப்பட்டுள்ளன.)
- விடயம் தொடர்பிலான சட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஆராய்ச்சி உதவியாளர்களாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டப் பீடத்தின் இறுதி ஆண்டு மாணவர்கள் 25 பேரின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்.
- போசகர் - உயர் நீதிமன்ற நீதிபி திருமதி சிரானி திலகவர்த்தன
- மேற்படி குழுக்களை வழிப்படுத்தல் : பிரதித் தவிசாளர் சட்டத்தரணி திருமதி சுஜாதா அழஹப்பெரும

5 குழுக்கள் பின்வருமாறாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துணைக் குழுக்கள் | 1. பல்வேறு சட்டங்களிலும் சிறுவர் எனும் பதத்தின் வரைவிலக்கணத்தின் சட்ட ரீதியான அந்தஸ்தை பொதுவான இணக்கப்பாடொன்றுக்கு கொண்டுவருதல் | 2. சிறுவர் துஸ்'பிரயோக வழக்குகளுக்கு சிறுவர்களுக்கு சாதகமான நீதிமன்ற முறையியலை அறிமுகம் செய்தல். | 3. சிறுவர்கள் தொடர்பிலான பொலிஸ் விசாரணைகளுக்குரிய வழிகாட்டல்களை அறிமுகம் செய்தல். | 4. வீடியோ சாட்சியங்கள் தொடர்பிலான நடவடிக்கைமுறையை அறிமுகம் செய்தல். | 5. நீதிபதிகளுக்கு சிறுவர் து'ஸ்பிரயோகம் மற்றும் சிறுவர் தவறாளிகளுக்கான தண்டனைக் கொள்கை அல்லது தண்டனை வழிகாட்டல்களை தயார் செய்தல். |
| குழு உறுப்பினர்கள் | 1. பேராசிரியர் ரோஸ் விஜேசேகர<br>2. சனாதிபதி சட்டத்தரணி பாலித பொ்ணாந்து<br>3. சிரே'ட விரிவுரையாளா் உதய குமார அமரசிங்க<br>4. சிரே'ட விரிவுரையாளா் ராஜா குணரத்ன<br>5. சட்டத்தரணி சுபுன் ஜயவா்த்தன<br>6. சட்டத்தரணி நிஹால் தல்துவ<br>7. சட்ட மாஅதிபரின் பிரதிநிதிகள் 02 பேர் | 1. சனாதிபதி சட்டத்தரணி பிரசாந்த லால் டி அல்விஸ்<br>2. சனாதிபதி சட்டத்தரணி உபாலி குணரத்ன<br>3. சிரே'ட விரிவுரையாளா் அமரதாச<br>4. சட்டத்தரணி ரஞ்ஜன் டி சில்வா<br>5. சட்டத்தரணி ஹா்சன நானாயக்கார<br>6. சட்டத்தரணி சஞ்ஜீவனீ அபேகோன்<br>7. சட்ட மாஅதிபரின் பிரதிநிதிகள் 02 பேர் | 1.பேராசிரியர் வசந்தா செனவிரத்ன<br>2. சனாதிபதி சட்டத்தரணி கபில வைத்யரத்ன<br>3. சட்டத்தரணி சந்திரா பொ்ணாந்து (பொலிஸ் மாஅதிபா்)<br>4. சட்டத்தரணி காமினி திசாநாயக்க (பி.பொ.மா.அ.)<br>5. சட்டத்தரணி அஜித் ரோஹன<br>6. சட்ட மாஅதிபரின் பிரதிநிதிகள் 02 பேர் | 1.கலாநிதி பிரதிபா மஹானாம<br>2. சனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர். டி சில்வா<br>3. சிரே'ட விரிவுரையாளா் திருமதி உதயங்கனீ<br>4. சட்டத்தரணி மகேஸ் கடுலந்த<br>5. சட்டத்தரணி யு.எம். சபுகொடன<br>6. சட்டத்தரணி சந்தியா தல்துவ<br>7. சட்ட மாஅதிபரின் பிரதிநிதிகள் 02 பேர் | 1. பேராசிரியா் ஜீவா நிரிஎல்ல<br>2. சனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன<br>3. சிரே'ட விரிவுரையாளா் திருமதி தா்'னீ<br>4. சட்டத்தரணி ஜே.எம். விஜேபண்டார<br>5. சட்டத்தரணி ரோசீனி ஹெட்டிகே<br>6. சட்டத்தரணி ரெனி பொ்ணாந்து<br>7. சட்ட மாஅதிபரின் பிரதிநிதிகள் 02 பேர் |
| ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் | யுனிசெவ் | சேவ் த சில்ரன் | ஆசிய மன்றம் மற்றும் யுஎன்ஓடிசி | லீட்ஸ் மற்றும் வோ்ல்ட் விசன் | சிறுவர் நிதியம் |

மேற்படி துணைக்குழுக்களின் மூலம்,

1. தேவைகள் பற்றிய கற்கையை மேற்கொள்ளல்
2. எண்ணக்கருப் பத்திரத்தை தயார் செய்தல்
3. கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை சேகரிப்பதற்கான செயலமர்வுகள், கலந்துரையாடல் கருத்தரங்குகளை நடாத்தல்
4. தரப்பினர்களின் இணக்கப்பாடு

**சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல்.**

தேசிய சிறுவர் பகல்நேர அரணைப்பு நிலையங்களுக்கான கொள்கையின் வரைவு தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இந்த வரைவை மீளாய்வு செய்வதற்கு நிபுணர் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது. மேற்படி நிபுணர் குழு இந்தக் கொள்கையை மீளத் தயார் செய்வதற்கான பிரேரணைகளை சமர்ப்பித்தது.

**சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஆகக் குறைந்த தரநியமங்களை தயார் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மாற்று சிறுவர் அரவணைப்பு சேவைகளை வழங்கும் 11 நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவை அனைத்துக்குமான ஆகக் குறைந்த தரநியமங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதரவற்ற சிறுவர்களுக்கான,

1. சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் எனும் சிறுவர் இல்லங்கள்
2. அரசாங்க பொறுப்பேற்றுக் கொள்ளும் இல்லங்கள்

சிறுவர் குற்றவாளிகளுக்கான

1. அரசாங்க தடுப்பு நிலையங்கள்
2. அரசாங்க சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள்
3. சிறுவர் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான

4. மாற்று அரவணைப்பு முறையொன்றாக தகுந்த ஆட்களிடம் (உறவினர்கள் மற்றும் குடும்பத்தில் நம்பிக்கையுள்ள) கையளிக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட சிறுவர்கள்

தற்காலிக மாற்று அரவணைப்புக்கான

5. சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்கள்

கல்வி நிலையங்களின் சிறுவர்களின் பாதுகாப்பை ஒழுங்குறுத்தல்

6. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள்
7. பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்கள்
8. பாடசாலை சிறுவர்களின் கட்டாயக் கல்விப் பாடசாலைக் குழுக்கள்
9. சிறுவர் விடுதிகள்

மேற்படி நிறுவனங்களின் அலுவலர்களுக்கு பயன்படுத்துவதை இலகுபடுத்துவதற்காக ODK App (Open Data Kit) டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியம கருவிகள் 11 தயார் செய்யப்பட்டன. இதன் மூலம் நிறுவனப் பொறுப்பாளர்களுக்கு தமது நிறுவனங்களின் தரத்தை தாமாகவே மதிப்பீடு செய்துகொள்வதற்கும், தமது நிறுவனங்களை தாமே அபிவிருத்தி செய்துகொள்வதற்கும் இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கின்றது. மேலும் சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குறுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு ஆற்றல் கிடைக்கின்றது.

ஆகக் குறைந்த தரநியமங்கள் 11 பின்வருமாறாகும்.

1. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ODK App (Open Data Kit)டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.
2. அரசாங்க பொறுப்பேற்றுக் கொள்ளும் இல்லங்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ழுனுமு App (Open Data Kit)டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.
3. அரசாங்க தடுப்பு நிலையங்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ழுனுமு App (Open Data Kit)டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.
4. அரசாங்க சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ODK App (Open Data Kit)டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.
5. சிறுவர் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரிகளுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ODK App (Open Data Kit)டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.
6. மாற்று அரவணைப்பு முறையொன்றாக தகுந்த ஆட்களிடம் (உறவினர்கள் மற்றும் குடும்பத்தில் நம்பிக்கையுள்ள) கையளிக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ODK App (Open Data முவை) டிஜிரல்

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.

7. சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ODK App (Open Data Kit)டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.
8. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ODK App (Open Data முறை) டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.
9. பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ழுனுமு App (Open Data Kit)டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.
10. பாடசாலை சிறுவர்களின் கட்டாயக் கல்விப் பாடசாலைக் குழுக்களுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ODK App (Open Data Kit)டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.
11. சிறுவர் விடுதிகளுக்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் மற்றும் ODK App (Open Data Kit)டிஜிரல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களுக்கான கருவி தயார் செய்யப்பட்டது.

**சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் சமய மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களில் காணப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் ஒழுங்குறுத்தப்படுகின்றன. இது இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மென்மேலும் வினைத்திறன்மிக்கவாறு இந்த ஆண்டு முதல் ODKமுறையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒழுங்குறுத்தலின் இறுதியில் ஒவ்வொரு வீடும் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தும் முறையியல் பயன்படுத்தப்படுகின்றது. மேற்படி வகைப்படுத்தலில் மேலே செல்வதை மேம்படுத்த வேண்டிய ஆகக் குறைந்த தரநியமங்கள் தொடர்பில் புரிந்துணர்வு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இது தொடர்பில் அரசினால் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அது தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்கும் இந்த ஒழுங்குறுத்தலின் பெறுபேறு பயன்படுத்தப்படுகின்றது. சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பில் ஆகக் குறைந்த தரநியமங்கள் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு ODK மென்பொருளைப் பயன்படுத்தி ஒன்லையின் தொழில்நுட்ப முறையியல் ஊடாக சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் 315 இன் ஒழுங்குறுத்தல்கள் நிறைவு செய்யப்பட்டன. இது தொடர்பில்

தயார் செய்யப்பட்ட இறுதி அறிக்கை நேர்வரிசை அமைச்சின் செயலாளருக்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் தேசிய ஆணையாளர் மற்றும் சகல உள்;ராட்சி ஆணையாளர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

**சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை (சிறுவர் இல்லம்) ஒழுங்குறுத்துவது பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை தயார் செய்யும் போது பின்வரும் முறையியல் பயன்படுத்தப்பட்டது.**

சிறுவர் அலுவல்கள் பற்றிய சகல தரப்பினர்களினதும் இணக்கப்பாட்டுடன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையில் வரைவு செய்யப்பட்டுள்ள இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை பயன்படுத்தி ஆகக் குறைந்த தரநியமங்களை வரைவு செய்வது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி வரைவு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்தல். பணிப்பாளர் சபையின் சிபாரிசு மற்றும் திருத்தங்களை உள்ளடக்கியதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர்களின் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்ளல் மேற்படி பிரேரணைகளுக்கு அமைய திருத்தம் செய்து ஆகக் குறைந்த தரநியமங்களை ஆவணப்படுத்தல். மேற்படி தரநியமங்கள் தொடர்பில் அமைச்சின் செயலாளர், மாகாண பிரதம செயலாளர்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் தேசிய ஆணையாளர் மற்றும் மாகாண ஆணையாளர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்கள்.





**சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை தரப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்**

அதற்கமைய 2020 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் இலங்கையில் அமைந்துள்ள தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் 315 ஒழுங்குறுத்தப்பட்டன. மேற்படி ஒழுங்குறுத்தலின் பெறுபேறுகளின் அடிப்படையில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அளவுகளை கவனத்தில் கொண்டு நிலையங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. அது பின்வருமாறாகும்.

தரப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

| **புள்ளிகளின் அளவு** | **மதிப்பீடு** | **உரிய தொகுதி** |
|---|---|---|
| 1 – 4 | சிறுவர் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தலாக உள்ளதனால் துரிதமாக தலையீடு செய்தல் வேண்டும் | ★ (red) |
| 4 – 7 | சிறுவர் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் இல்லை எனினும் மேம்படுத்தப்பட வேண்டிய நிலைமையாகும். | ★★ (yellow) |
| 7 – 10 | சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் திருப்தியுற முடியும். குறித்த காலத்தில் கண்காணிப்புச் செய்ய முடியும். | ★★★ (green) |

**2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் ஒழுங்குறுத்தலின் பெறுபேறுகள் பின்வருமாறாகும்.**

2020 ஒழுங்குறுத்தப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை 315

2020 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் அரவணைப்புப் பெற்ற மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை – 8775

(1) சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் 03 வருடங்களுக்கும் மேல் இருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை

2020 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் 03 வருடங்களுக்கும் மேல் இருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை ெ – 4999 (57%)




| சிறுவர்களின் வகை | எண்ணிக்கை<br>8775 | விகிதம் |
|---|---|---|
| 03 வருடத்திற்கும் மேல் உள்ள ஆதரவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை | 2748 | 31% |
| 03 வருடத்திற்கும் மேல் உள்ள கைவிடப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை | 1184 | 13% |
| 03 வருடத்திற்கும் மேல் உள்ள அநாதை சிறுவர்களின் எண்ணிக்கை | 771 | 09% |
| 03 வருடத்திற்கும் மேல் உள்ள து'ஸ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை | 288 | 03% |
| 03 வருடத்திற்கும் மேல் உள்ள சிறுவர் தவறாளிகளின் எண்ணிக்கை | 08 | 01% |
| சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் 03 வருடங்களுக்கும் மேல் இருக்கும் மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை | 4999 | 57% |

## மாவட்ட அடிப்படையில் நாட்டில் அமைந்துள்ள தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் வியாபித்துள்ள விதம் - 2020




## மாகாண அடிப்படையில் நாட்டில் அமைந்துள்ள தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களவியாபித்துள்ள விதம் - 2020



2020 தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் கண்காணிப்புச் செய்வது நிறைவு செய்யப்பட்டது. மொத்தம் 315 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள். 2020 ஆம் ஆண்டு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை கண்காணிப்புச் செய்வது பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாட்டில் அமைந்துள்ள தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் பிரதானமாக 03 வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| இல. | வர்ணம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சிவப்பு | 02 |
| 02 | மஞ்சல் | 50 |
| 03 | பச்சை | 263 |

சிவப்பைப் பெற்றுக் கொண்ட 02 நிலையங்கள் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலரின் தலைமையிலான குழுவொன்றின் மூலம் 02 வாரங்களுக்குள் கண்காணிப்புச் செய்யப்படுகின்றது.

மஞ்சலை பெற்றுக் கொண்ட நிலையங்கள் மேற்படி பிரதேச சபையின் சிறுவர் பாதுகாப்பு அலுவலர் ஊடாக 2 மாதங்களுக்குள் மீண்டும் கண்காணிப்புச் செய்யப்படும்.

**மாவட்டங்களுக்கு அமைய நாட்டில் அமைந்துள்ள தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை – 2020 ஆம் ஆண்டு**

**பச்சை நிரல்  மஞ்சல் நிரல்  சிவப்பு நிரல்**



**2020 ஆம் ஆண்டு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்துவது பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாட்டில் அமைந்துள்ள தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் பிரதானமாக 03 வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள முறை**

சிவப்பு 02, மஞ்சல் 50, பச்சை 263







சிறுவர் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் நிலவுவதன் காரணமாக துரிதமாக தலையீடு செய்தல் வேண்டும்

சிறுவர் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் இல்லை எனினும் மேம்படுத்தப்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

சிறுவர் பாதுகாப்பு பற்றி திருப்தியடைய முடியும். குறித்த காலப்பகுதிக்குள் கண்காணிப்புச் செய்ய முடியும்.

**2020 சிறுவர் இல்லங்கள் (315) ஒழுங்குறுத்தலின் GPS மாதிரியமைப்பின் மூலம் சிறுவர் இல்லங்கள் இலங்கையில் பரந்துள்ள முறை தெளிவாக விபரிக்கப்படுகின்றது.**



மேற்படி ஒழுங்குறுத்தலின் ஒவ்வொரு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களினதும் நிலைமை பற்றிய அறிக்கைகள் குறித்த சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் உரிய மாகாண ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்களை ஒழுங்குறுத்தல்**

2011/17 கல்விச் சுற்றறிக்கைக்கு அமைய தரம் 6 முதல் உயர் தரங்களுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு நிகழ்ச்சித்திட்டம் எனும் "சுரகும் பவ்வ" நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குறுத்துவதற்கான ஆகக் குறைந்த தரநியமங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களின் ஆகக் குறைந்த தரநியமங்கள் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண பிரதம செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

ஆகக் குறைந்த தரநியமங்கள் தொடர்பில் தயார் செய்யப்பட்ட ஒன்லையின் படிவம் தொடர்பில் மாகாண கல்விப் பணிப்பாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஊவா மாகாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதற்கமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளரின் பங்கேற்புடன் பதுளை மாகாண பிரதம செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மேற்படி அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை ஒழுங்குறுத்துவது தொடர்பிலான ஒன்லையின் ஒழுங்குறுத்தல் கேள்விக் கொத்து சகல திருத்தங்களும் நிறைவு செய்யப்பட்டு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.




**அரசாங்க பொறுப்பேற்றுக் கொள்ளும் இல்லங்களை ஒழுங்குறுத்தல்**

அரசாங்க பொறுப்பேற்றுக் கொள்ளும் இல்லங்களை ஒழுங்குறுத்துவதன் மூலம் நிறுவனத்தில் காணப்படுகின்ற நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கும், மேற்படி மதிப்பீட்டை இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கு அறிவிப்பதன் மூலம் அங்கு அரவணைப்புப் பெறுகின்ற ஒவ்வொரு குழந்தையினதும் பாதுகாப்பு, அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி மேம்படுத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்வதாகும். ஆகக் குறைந்த தரநியமங்கள் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ODK மென்பொருளை பயன்படுத்தி கேள்விக்கொத்து தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் செயற்படுவதற்கான திட்டமும் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

ஆகக் குறைந்த தரநியமங்களுக்கு அமைய அரசாங்க பொறுப்பேற்றுக் கொள்ளும் இல்லங்களை ஒழுங்குறுத்துவதற்கு குறித்த ODK ஒன்லையின் படிவம் தயார் செய்யப்பட்டது. இந்தப் படிவம் ODK கையடக்கத் தொலைபேசி செயலி மூலமும் பயன்படுத்தப்பட முடியும்.

**அரசாங்க தடுத்துவைத்தல் இல்லங்களை ஒழுங்குறுத்தல்**

அரசாங்க தடுத்துவைத்தல் இல்லங்களை ஒழுங்குறுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. அதற்கமைய ஒரு சில விடயங்களின் கீழ் மேற்படி தடுத்துவைத்தல் இல்லங்களில் சிறுவர்களை சகல வகையிலுமான துஸ்பிரயோகங்கள் மற்றும் துர்நடத்தைகளிலிருந்தும் பாதுகாத்தல், சுகாதார வசதிகளை செய்துகொடுத்தல், தற்போது காணப்படுகின்ற ஆகக் குறைந்த தரநியமங்கள் போன்றன தொடர்பில் மதிப்பீடு செய்வதும், அச்சுறுத்தலான நிலைமைகள் காணப்படுமாயின் துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய தரப்பினர்களை அறிவுறுத்துவத்றகும் இந்த ஒழுங்குறுத்தல் பயன்படுத்திக்கொள்ளப்படும்.

ஆகக் குறைந்த தரநியமங்கள் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ODK மென்பொருளை பயன்படுத்தி கேள்விக்கொத்து தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**அரசாங்க சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளை ஒழுங்குறுத்தல்**

அரசாங்க சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளை ஒழுங்குறுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

இதற்குரிய ஆகக் குறைநத தரநியமங்கள் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன. சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளில் காணப்படுகின்ற நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கும், மேற்படி மதிப்பீட்டை உரிய பாடசாலை பொறுப்பாளர்களுக்கு அறிவிப்பதன் மூலம் அங்கு அரவணைப்புப் பெற்றுள்ள ஒவ்வொரு சிறுவரினதும் பாதுகாப்பு, அரவணைப்பு மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு அதனைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், சிறுவர் துர்நடத்தைகளுக்கு ஆளானவர்களை பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் புனர்வாழ்வளிக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்கு இதன் மூலம் இயலுமாகும். ODK மென்பொருளைப் பயன்படுத்தி கேள்விக்கொத்து தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**சிறுவர் தவறாளிகளின் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகளை ஒழுங்குறுத்தல்**

சிறுவர் தவறாளிகளின் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகளை ஒழுங்குறுத்துவதற்கு ODK மூலம் சகல நடவடிக்கைகளும் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**மாற்று பராமரிப்பு முறையொன்றாக தகுந்த ஆட்களிடம் (உறவினர்கள் மற்றும் குடும்பத்தின் நம்பகமான ஒருவர்) பொறுப்பளிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பற்றி ஒழுங்குறுத்தல்**

மாற்று பராமரிப்பு முறையொன்றாக தகுந்த ஆட்களிடம் (உறவினர்கள் மற்றும் குடும்பத்தின் நம்பகமான ஒருவர்) பொறுப்பளிக்கப்படுகின்ற பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பராமரிப்பு தொடர்பில் முறையான ஒழுங்குறுத்தல் முறையியலை தயார் செய்ய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. பெற்றோர் பாதுகாவலர் ஒருவருக்கு எதிராக சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் மேற்படி துஷ்பிரயோகத்திற்கு ஆளான பிள்ளையை தொடர்ந்தும் மேற்படி பெற்றோர் பாதுகாவலரிடம் தடுத்துவைப்பதற்குப் பதிலாகமாற்று அரவணைப்பைக் கொண்டதொரு இடத்தில் தடுத்துவைக்க வேண்டி ஏற்படும். பிள்ளையின் நெருங்கிய உறவினர் அல்லது குடும்பத்தின் நம்பிக்கைக்குரிய ஒருவர் பிள்ளைக்கு அரவணைப்பைப் பெற்றுக் கொடுக்க தகுந்த ஒருவராக கருதப்பட்டு நீதிமன்றத்தினால் இவ்வாறு சிறுவர்கள் அவர்களிடம் பொறுப்பளிக்கப்படுவார்கள். இவ்வாறு சிறுவர்களின் அரவணைப்பை தற்காலிகமாக செய்துகொடுக்கும் ஆட்களிடமிருந்து மேற்படி சிறுவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக மற்றும் கல்வி சம்பந்தமான சிக்கல்கள்

காரணமாக மேற்படி பிள்ளைகள் அசௌகரியத்திற்கு ஆளாகும் சந்தர்ப்பங்கள் பற்றி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறியக் கிடைக்கின்றது.

இக்காரணங்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த சிறுவர்களை சமூகமயப்படுத்துவதில் போது பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. எனவே குறித்த சிறுவர்களின் பாதுகாப்பானதன்மையை கட்டியெழுப்புவதற்காக இந்த சிறுவர்கள் தொடர்பில் முறையான ஒழுங்குறுத்தல் முறையியலை சமர்ப்பிப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை செயற்பட்டு வருகின்றது. 2020 ஆம் ஆண்டில் ஒழுங்குறுத்தலை மேற்கொள்வது தொடர்பிலான ஒன்லையின் ODK மென்பொருளைப் பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் தேசிய நன்னடத்தை ஆணையாளர் மற்றும் மாகாண நன்னடத்தை ஆணையாளர்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதன் ஆகக் குறைந்த தரநியமங்கள் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்களை ஒழுங்குறுத்தல்**

இலங்கையில் சிறுவர் பராரிப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு இடையே சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்கள் விசேட இடமொன்றை வகிக்கின்றது. எனவே தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர் பகல் நேர பராமரிப்பு நிலையங்களை ஒழுங்குறுத்துவதை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது. இந்த ஒழுங்குறுத்தலின் இறுதியில் ஒவ்வொரு நிலையமும் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தும் முறை பயன்படுத்தப்படும். இவ்வாறு வகைப்படுத்தில் மேல் நோக்கிச் செல்வதற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த தகைமைகள் தொடர்பான புரிந்துணர்வு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இது தொடர்பில் அரசினால் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அது தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்கும், இந்த ஒழுங்குறுத்தலின் பெறுபேறு பயன்படுத்தப்படும். இங்கு ஆகக் குறைந்த தரநியமங்கள் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ODK மென்பொருளைப் பயன்படுத்தி கேள்விக் கொத்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இப்பணியை மேற்கொள்ளத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சகல மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களும் இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மேலும் சகல மாகாணங்களினதும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

**முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தும் செயன்முறையை இரண்டு கட்டங்களின் கீழ் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 01 ஆம் கட்டத்தின் கீழ் குறித்த பணி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் ஊடாக ஒழுங்குறுத்தலை மேற்கொள்ளவும், கட்டம் 02 இன் கீழ்

பெயரிடப்பட்ட அலுவலா் குழுவொன்றினாலும் ஒழுங்குறுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஒன்லையின் கேள்விக் கொத்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஆகக் குறைந்த தரநியமங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி விடயப்பொறுப்பு (பாலா் பாடசாலை) கல்விப் பணிப்பாளா்கள் இது தொடா்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளாா்கள். ODK மென்பொருளைப் பயன்படுத்தி கேள்விக் கொத்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது தொடா்பில் சிறுவா் செயலகத்தின் அலுவலா்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளாா்கள் என்பதுடன், தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலா்களும் அறிவுறுத்தப்பட்டள்ளாா்கள்.

**பாடசாலை சிறுவா்களின் கட்டாயக் கல்விக் குழுக்களை ஒழுங்குறுத்தல்**

இலங்கையில் பாடசாலை சிறுவா்களின் கட்டாயக் கல்விக்குள்ள உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பாடசாலைகளில் தாபிக்கப்பட்டுள்ள பாடசாலைக் குழுக்களை ஒழுங்குறுத்துவதற்கு தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபை திட்மிட்டடுள்ளது. இதன் போது பாடசாலை குழுக்களை ஒழுங்குறுத்துவதற்கு மற்றும் மேற்படி குழுக்களை ஆகக் குறைந்த தரநியமங்களுக்கு அமைய ஒழுங்கு செய்வதற்கு கல்வி அமைச்சுக்கு உதவி வழங்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் இந்த ஒழுங்குறுத்தலை ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குறுத்தல் பணிகளை தொழில்நுட்ப முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளத் தேவையான ஒன்லையின் கேள்விக் கொத்து தயாா் செய்து முடிக்கப்பட்டுள்ளது. தேசிய சிறுவா் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலா்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலா்களுடன் இதனை அமுல்படுத்த ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**சிறுவா் விடுதிகளை ஒழுங்குறுத்தல்**

இது தொடா்பில் ஆகக் குறைந்த தரநியமங்கள் தயாா் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவற்றைப் பயன்படுத்த எதிா்பாா்க்கப்படுகின்றது.

**கொவிட் 19 நிலைமை தொடா்பில் ‘அவசர சிறுவா் பாதுகாப்புத் தேவைகள் பற்றிய தேசிய ஆய்வு’**

இந்த நிகழ்ச்சித்திட்டம் பல கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

இப்பணிகள் ஒன்லையின் முறையில் மேற்கொள்ளப்பட்டன.

1. 29 ஏப்ரல் 2020 – கொவிட் 19 காலப்பகுதியில் அவசர சிறுவர் பாதுகாப்புத் தேவைகள் - கேள்விக் கொத்தை தயார் செய்தல்
2. 23 மே 2020 – கொவிட் 19 காலப்பகுதியில் அவசர சிறுவர் பாதுகாப்புத் தேவைகள் - கேள்விக் கொத்தின் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
3. 01 யூன் முதல் 10 யூன் 2020 – தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முன்னெடுப்புடன் யுனிசெவ், சைல்ட் பண்ட் மற்றும் வோ்ல்ட் விசன் நிறுவனத்துடன் இணைந்து தேசிய ஆய்வு யூன் மாதம் நடாத்தி முடிக்கப்பட்டது.
4. இது பகுப்பாய்வு செய்யப்பட்டு செப்தெம்பர் மாதம் இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டது.

**கைவிடப்பட்ட குழந்தைகளை பாதுகாத்தல்**

சிறுவர் து'ஸபிரயோகத்தை தடுக்கும் பணிக்காக மற்றும் அவ்வாறான து'ஸ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் மேற்படி பணிக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்;ராட்சி மன்றங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஆலோசனைகளை வினவுதல்.

இலங்கையில் பல்வேறு காரணங்களினாலும், பல்வேறு இடங்களிலும் கைவிட்டுச் செல்லப்படுகின்ற புதிதாக பிறந்த சிசுக்களின் பாதகாப்பு மற்றும் நல்ல நிலைத்திருத்தல் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தீர்மானம் செய்துள்ளது. அதற்கமைய இப்பிள்ளைகளுக்கு உகந்த எதிர்கால அரவணைப்பு, பாதுகாப்பை செய்துகொடுக்கும் வரை இச்சிசுக்களை பொறுப்பளிப்பதற்கென 09 மாகாணங்களிலும் பிரதான வைத்தியசாலைகளில் கருமபீடங்கள் தாபிக்கப்படவுள்ளன.

இக்கரும பீடங்களை சுகாதார அமைச்சுடன் இணைந்து பிரதான வைத்தியசாலைகளில் தாபிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இப்பணியை முறையாகவும், திட்டமிட்டும் அமுல்படுத்துவதற்கு முன்னர் அது பற்றிய தரவுகளை சேகரித்து முறையான ஆய்வொன்றை நடாத்தத் தேவையான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசுக்கும் இது பற்றி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

2011/17 கல்வி சுற்றறிக்கைக்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டமொன்றாக பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களைத் தாபித்தல் மற்றும் முனைப்புடன் இயங்கச் செய்வதை குறிப்பிட முடியும். 2020 ஆம் ஆண்டு மாணவர்களை விழிப்புணர்வூட்டும் 203 நிகழ்ச்சித்திட்டங்கள், பெற்றோரை

விழிப்புணர்வூட்டும் 81 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டும் 131 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு (சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் அலுவலர்கள் மற்றும் சிறுவர்கள்) விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் அரவணைப்புப் பெறுகின்ற சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் சிறுவர் அரவணைப்பு நிலைய சேவைகளை வழங்கும் அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்வதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. மேலும் இதன் போது அரவணைப்புப் பெறுகின்ற சிறுவர்களை சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பில் எண்ணக்கருப் பத்திரமொன்று தயார் செய்யப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**அரசாங்க தடுத்துவைக்கும் இல்லங்களுக்கான (சிறுவர் அரவணைப்பு சேவை வழங்கும் அலுவலர்கள் மற்றும் சிறுவர்கள்) விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டமானது, அரசாங்கத்தினால் பேணிவரப்படுகின்ற தடுப்பு இல்லங்களுக்காக நடாத்தப்படுகின்றது. மேற்படி நிறுவனங்களில் அரவணைப்புப் பெறுகின்ற சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு ஊழியர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்வதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. தேவையான ஒருங்கிணைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கு (சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் அலுவலர்கள் மற்றும் சிறுவர்கள்) விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

பகல்நேர பராமரிப்பு நிலையங்களில் சேவையாற்றும் பதவியணியினருக்காக இந்த விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பகல்நேர பராமரிப்பு நிலையங்களில் அரவணைப்புப் பெறுகின்ற சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் சிறுவர் அரவணைப்பு நிலைய சேவைகளை வழங்கும் அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்வதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இந்த நிலையங்களில் சிறுவர்களுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒருங்கிணைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**அரசாங்க பொறுப்பேற்றுக் கொள்ளும் இல்லங்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் (சிறுவர் பாதுகாப்பு சேவைகளை வழங்கும் அலுவலர்கள் மற்றும் சிறுவர்கள்)**

அரசாங்கத்தினால் பேணிவரப்படுகின்ற பொறுப்பேற்றுக் கொள்ளும் இல்லங்களில் சேவையாற்றும் ஊழியர்கள் விழிப்புணர்வூட்டப்படுகின்றார்கள். இதன் மூலம் பொறுப்பேற்றுக் கொள்ளும் இல்லங்களில் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பு பற்றிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு அபிவிருத்தி செய்யப்படுகின்றது. ஆகக் குறைந்த தரநியமங்கள் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஒடிகே மென்பொருளைப் பயன்படுத்தி கேள்விக் கொத்தும் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**பெருந்தோட்டத்துறை சார்ந்த சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

பெருந்தோட்டத்துறைசார்ந்த சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு தோட்டத்துறையில் வாழும் சிறுவர்களுக்கான உளவியல் சமூக செயற்பாடுகளை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதன் நோக்கங்களில், தோட்டங்களில் வாழும் சிறுவர்கள் சகல வகையிலுமான துஂஸபிரயோகங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு மகிழ்ச்சியுடன் வாழ்பவர்களை அவர்களை மாற்றியமைக்க தோட்டத்துறையில் வாழும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ள சிறுவர்களை இனங்காண்பதும், அதற்குக் காரணமான காரணிகள் மற்றும் குடும்பப் பின்னணியை இனங்காண்பதற்கும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பின்னாய்வு செய்தல், தோட்டத்துறையில் வாழும் சிறுவர்களின் மனஅழுத்தத்தை குறைப்பதற்கான ஆக்கபூர்வமான மற்றும் உளவியல்சார் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், தோட்டத்துறையில் வாழும் சிறுவர்களுக்கு தமது கருத்துக்களை வெளியிட வாய்ப்பளித்தல், தோட்டத்துறையில் வாழும் சிறுவர்களுக்கு செவிசாய்த்தல், அவர்களின் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் மற்றும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் ஆற்றலை வளர்த்தல், அவர்களின் தலைமைத்துவ ஆற்றல்களை வளர்த்தல் மற்றும் தோட்டத்துறையில் முழுமையான ஆளுமையைக் கொண்ட சிறுவர் பரம்பரையை தேசத்திற்கு உரித்தாக்கிக் கொடுத்தல் ஆகியனவாகும்.

இதற்கமைய 2020 ஆம் ஆண்டு மல்லவபிட்டய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான மொனரதென்ன தோட்டம், மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான முவன்கந்த தோட்டம், அரநாயக்க பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான ஜம்புகஸ்மட தோட்டங்களை மையமாகக் கொண்டு சிறுவர்களுக்கான உளவியல் சமூக செயற்பாடுகளை உள்ளடக்கிய 03 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதன் மூலம் பயனடைந்த சிறுவர்களின் எண்ணிக்கை 104 பேர் ஆகும். மேலும் அம்பன்கமுவ, மல்லவபிட்டி, அதுரலிய, பெல்மடுல்ல, மாவத்தகம,

அரநாயக்க, தவலம, ரத்தொட்ட, பொல்கஹவெல, உக்குவல, கங்கவட்டகோரல, கஹவத்த, கொத்மலே, மெததும்பர, கங்கஇஹலகோரல, நிவிதிகல, படல்கும்புர, எல்பிட்டிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உரித்தான தோட்டங்களில் வாழும் சிறுவர்களுக்கான உளவியல் சமூக செயற்பாடுகளை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான உளவியல் சமூக உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

**பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

இலங்கையில் காணப்படுகின்ற ஒவ்வொரு பொலிஸ் பயிற்சிக் கல்லூரியிலும் பயிற்சி பெறுகின்ற ஒவ்வொரு பயிலுனருக்கும் சிறுவர்களுக்கு எதிரான பல்வேறு வகையிலுமான து'ஸபிரயோகங்களையும் தடுத்துக் கொள்வதற்கும்,துஸ்'பிரயோகத்திற்கு ஆளான பிள்ளைகளுக்கு பாதுகாப்பை செய்துகொடுப்பதற்கும், அதற்குக் காரணமாகின்ற விடயங்களை வெளிப்படுத்தத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை கட்டியெழுப்பிக் கொள்வதற்கும் இவ்வாறான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படும். இதன் ஊவா மாகாணத்திற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளரின் தலைமையில் மொனராகலை மற்றும் பதுளை பொலிஸ் அலுவலர்களுக்காக பதுளை மாவட்ட செயலகத்தில் நடாத்தப்பட்டுள்ளது.**சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தேசிய கல்விக் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் மற்றும் கல்விப் பதவியணி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்.**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தேசிய கல்விக் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் மற்றும் கல்விப் பதவியணி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய கல்வியியல் கல்லூரிகளில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான ஒருங்கிணைப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

**சுகாதார தொழில்வல்லுனர்கள் மற்றும் பதவியணியை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

நிருவாக குடும்ப சுகாதார சேவைகள் அலுவலர்கள், பொது சுகாதார சேவைகள் அலுவலர்கள், பொது சுகாதார தாதிமார், குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், தொண்டர் சுகாதார ஊழியர்கள் மற்றும் பட்டப் பின் படிப்பை கற்கும் மருத்துவர்களுக்காக சிறுவர்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமான சுகாதார தொழில்வல்லுனர்களாக அவர்களை மாற்றியமைத்தல், சிறுவர்களை சகல வகையிலுமான து'ஸ்பிரயோகங்களிலிரந்தும் பாதுகாப்பதற்காக சமுதாய மட்டத்தில் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளல், அரச அலுவலர் மற்றும் சமுதாய அங்கத்தவர் என்ற வகையில் சிறுவர் து'ஸ்பிரயோகத்தின் போது அல்லது அவ்வாறான அபாயகரமான நிலைமையில் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் சிறுவர் துஸ்'பிரயோகமொன்றின் போது அல்லது அவ்வாறான அச்சுறுத்தலான நிலைமையில்

செயற்பட வேண்டிய முறை பற்றிய முறையான அறிவு மற்றும் திறமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. சுகாதார தொழில் வல்லுனர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் பேணிவருகின்ற தொடர்பை வலுவூட்டுவதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் மூலம் சிறுவர்களின் பாதுகாப்பின் போது சுகாதார தொழில்வல்லுனர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய 2020 ஆம் ஆண்டில் நாஉல, நானாட்டான் மற்றும் கிராந்துருகோட்டே சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களை மையமாகக் கொண்டு விழிப்புணர்வூட்டும் 3 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதன் மூலம் விழிப்புணர்வூட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை 117 பேர் ஆவார்கள்.

மேலும் 2020 ஆம் ஆண்டு பட்டப் பின் படிப்பு நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்கள் 54 பேருக்காக ஒன்லையின் முறையில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது. பட்டப் பின் படிப்பு மருத்துவ மாணவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு பயிற்சி 2020.12.18 ஆம் திகதி சூம் தொழில்நுட்பத்தைப் பயன்படுதி நடாத்தப்பட்டது.

**பாடசாலை ஆரம்பப் பிரிவு பாடவிதானத்தில் உள்ளடங்கியுள்ள சிறுவர் பாதுகாப்பு முறைகளைப் பயிற்றுவித்தல்**

இதன் மூலம் பாடசாலை செல்லும் வயதிலுள்ள ஒவ்வொரு பிள்ளையையும் சகல வகையிலுமான து‍ஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நேரடியான ஆளுமையைக் கொண்ட சிறுவர்களை உருவாக்குவதற்காக பாடசாலை பாடவிதானத்தில் சிறுவர் பாதுகாப்பு பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்படும். இது தொடர்பில் கல்வி அமைச்சுடன் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. இப்பயிற்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்ற கருவிகளுக்கு அங்கீகாரம் பெறுவதற்காக தேசிய கல்வி நிறுவகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப தரத்தின் பாடவிதானத்திற்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான விடயங்களை உட்புகுத்துவது தொடர்பில் ஆசிரிய ஆலோசகர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக தயார் செய்யப்பட்ட கல்வி உதவி வீடியோசுருள் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி விடயங்கள் பற்றிய குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு அக்குழுவின் அங்கீகாரம் கிடைத்தது. அதற்கமைய இதற்கான கருவிகள் பற்றிய பயிற்சியை கல்வி அமைச்சுடன் இணைந்து எதிர்காலத்தில் கூட்டாக மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**சுனாமி பாதுகாவலர் பெற்றோர் அரவணைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

2004 ஆம் ஆண்டு முழு நாட்டையும் பாதித்த சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிக்காக நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2005 இன் 16

ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ஆக்கப்பட்டது. அதற்கமைய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுனாமி பெற்றோர் அரவணைப்பை மதிப்பீடு செய்யும் சபை நிகழ்ச்சித்திட்டம் மாவட்ட ரீதியாக வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மதிப்பீட்டுச் சபைகள் நடாத்தப்பட்டன. பாதுகாவலரான பெற்றோர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இன்று சிறுவர்கள் 49 பேர் அரவணைப்பைப் பெறுகின்றார்கள்.

கல்வி உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாக 2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுவர்கள் 31 பேருக்கு கல்வி நடவடிக்கைகளுக்கான உதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதன் போது சுனாமி பாதுகாவலர் அரவணைப்பு பொறுப்பாளர் சபையினால் வழ்கப்பட்டுள்ள சிபாரிசுக்கு அமைய மாதாந்தம் ரூபா 5,000.00 வீதம் பிள்ளைகள் 24 பேருக்கும் ரூபா 3500 வீதம் சிறுவர்கள் 7 பேருக்கும் கல்வி உதவி வழங்கப்படுகின்ற மேற்படி சிறுவர்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறாகும்.

| | மாவட்டம் | கல்வி உதவி பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காலி | 02 |
| 2 | ஹம்பாந்தோட்டை | 15 |
| 3 | மாத்தறை | 03 |
| 4 | மட்டக்களப்பு | 05 |
| 5 | அம்பாறை | 05 |
| 6 | களுத்துறை | 01 |
| | மொத்தம் | 31 |

**பாதிக்கப்பட்ட,ஓரங்கப்பட்டப்பட்டுள்ள மற்றும் அச்சுறுத்தலான நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் வேறு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, விசாரணைகளின் போது இனங்காணப்படுகின்ற கல்வி வசதிகள் தேவையான பாதிக்கப்பட்ட, ஓரங்கப்பட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு கல்வி

உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது முக்கிய பணியாகும். இதற்கமைய, சிறுவர்கள் 2144 பேருக்காக ரூபா 223,650.00 ஆன தொகை கல்வி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு எச்.ஐ.வீ. மற்றும் பாலியல்சார்ந்த நோய்கள் பற்றி கட்டிளம் பருவ பிள்ளைகளை விழிப்புணர்வூட்டும் கையேடு**




தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களுக்கு எச்.ஐ.வீ. மற்றும் பாலியல்சார்ந்த நோய்கள் பற்றி கட்டிளம் பருவ பிள்ளைகளை விழிப்புணர்வூட்டுவதற்கான கையேடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டதுடன்,தொழில்நுட்ப உதவி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளர் உள்ளிட்ட அலுவலர்களினால் வழங்கப்பட்டது.

**அச்சுறுத்தலான சிறுவர்கள் பற்றி வரைபடமாக்கல்**

அச்சுறுத்தலான சிறுவர்கள் பற்றி வரைபடமாக்கல் தொடர்பாக ஒழுங்குறுத்தல் கருத்திட்டமொன்றாக களுத்துறை மாவட்டத்தில் அமுல்படுத்துவதற்கு எண்ணக்கருப் பத்திரம் மற்றும் ஒன்லயின் படிவத்தை வடிவமைப்பதும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**1929 சிறுவர் உதவித் தொலைபேசி இலக்கம் பற்றி விழிப்புணர்வூட்டுவதற்கான ஸ்ரிக்கர் ஒன்றை வடிவமைத்தல்**

1929 சிறுவர் உதவித் தொலைபேசி இலக்கத்தை பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் 35,000 ஸ்ரிக்கர்கள் அச்சிடப்பட்டன. இந்த ஸ்ரிக்கர்கள் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், பகர் நேர பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**சிறுவர் துஷ்பியோகங்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நிறுவன ரீதியான சம்வங்களை மீளாய்வு செய்தல்**

துஷ்பிரயோகத்திற்கு ஆளான பாதிக்கப்பட்ட சிறுவர்களை வைத்தியசாலைகளிலிருந்து அனுப்பிவைக்க முன்னர் மேற்படி பாதிக்கப்பட்ட சிறுவர்களை தகுந்த பொறுப்பாளர்களிடம் கையளித்தல் வேண்டும். அதற்கு உகந்த பொறுப்பாளர்களை தீர்மானிப்பது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் நிறுவன ரீதியான சம்பவ மீளாய்வுக் கலந்துரையாடலின் பின்னராகும்.

இது ஒழுங்கு செய்யப்படுவது வைத்தியசாலையின் நீதிமன்ற மருத்துவ நிபுணர், சிறுவர் நோய் நிபுணர், உளவியல் நோய் நிபுணர் அல்லது பெண்களின் நோய்கள் பற்றிய மருத்துவ நிபுணர் ஆகியோரினாலாகும். அவர்கள் இதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட உளவியல் சமூக அலுவலர் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலரை அதில் பங்கேற்கச் செய்து கொள்வதற்காக வைத்தியசாலைக்கு அழைப்பு விடுக்க வேண்டும். இதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்கள் பங்கேற்கின்றார்கள்.

2020 ஆம் ஆண்டு அதற்காக சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களின் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளைக் கொண்டதாக சுவரொட்டியொன்று வடிவமைக்கப்பட்டு ஒவ்வொரு வைத்தியசாலையிலும் மேற்படி மருத்துவ நிபுணர்களுக்கு ஒரு பிரதியை வழங்கவும், உரிய வார்ட் சுவரில் அறிவித்தல் பலகையில் ஒரு பிரதியை ஒட்டவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்கள் 2020 ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

இவ்வனைத்து சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் அவர்கள் சேவையாற்றும் இடத்திற்கே விசேடமான தொலைபேசி இலக்கமொன்று யுனிசெவ் உதவியின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**சிறுவர்களின் உளவியல் சுகாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளவியல் சமூகப் பிரிவின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகைதரும் பிள்ளைகள் மற்றும் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வதற்காக வருகைதரும் பிள்ளைகளுக்கு தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றன. மேலும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் விசேட கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் சிறுவர்களுக்கான உளவியல் மற்றும் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதும், கல்வி உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய 2020 ஆம் ஆண்டில் வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்காக வருகைதந்த பிள்ளைகள் 91 பேருக்கும், நேரடியாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வருகைந்த மற்றும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் கோரிக்கைகளை சமர்ப்பித்த பிள்ளைகள் 94

பேருக்கும் உளவியல் சமூக தலையீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. கொவிட் 19 நிலைமைக்கு மத்தியில்,

- ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட உளவியல்ரீதியாக பாதிக்கப்பட்ட ஒரு பிள்ளையை மருத்துவ சிகிச்சைகளை பெறுவதற்கு வழிநடாத்துவதற்குத் தேவையான உளவியல் சமூக தலையீடுகளை மேற்கொள்ளல்.
- கம்பஹா மாவட்ட செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட கொவிட் 19 திடீர் அனர்த்த நிலைக்கு ஆளான பிள்ளைகளுக்காக உளவியல் சமூக உபகரணங்களை கொள்வனவு செய்தல்
- குருநாகல் மாவட்ட செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட கொவிட் 19 திடீர் அனர்த்த நிலைக்கு ஆளான பிள்ளைகளுக்காக உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

**பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களுக்கான உளவியல் சமூக பயிற்சி**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களுக்கு உளவியல் சமூக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சிறுவர்களுக்கு உளவியல் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஆலோசனை வழங்குவது தொடர்பில் பாடசாலை ஆலோசனை ஆசிரியர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்வது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**திறிய நிகழ்ச்சித்திட்டம் (பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற பிள்ளைகளுக்கான உளவியல், சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.)**

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அச்சிறுவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை வலுவூட்டுவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. பிரதேச மட்டத்தில் சிறுவர்கள் 2290 பேருக்கு உளவியல் சமூக உதவிகளும், தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**“சித்சவிய” தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை**

இந்த நிகழ்ச்சித்திட்டம் கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல மூடப்பட்டிருந்த நிலையில் நாட்டில் வாழும் பிள்ளைகளின் உச்சளவான நலன்புரிக்காக புதிய முறையியல் ஒன்றாக தொலைஉளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது இந்த ஆண்டில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கௌரவ தவிசாளர் பேராசிரியர் முதித விதானபதிரன அவர்களின்

எண்ணக்கருவுக்கு அமைய ‘சித் சவிய’ தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை அறிமுகம் செய்யப்பட்டது.

இதன் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளவியல் சமூக பிரிவு பிரதான நடவடிக்கை அலகாக செயற்பட்டு வருவதுடன், அதற்குச் சமாந்தரமாக முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களை தொடர்புபடுத்திக் கொண்டு சேவையாற்றும் வலையமைப்பு தாபிக்கப்பட்டது.

இந்த உளவியல் முதலுதவி மற்றும் உளவியல் சமூக உதவிச் சேவையானது, வழங்குவதை அவதானிப்புச் செய்தல், செவிசாய்த்தல் மற்றும் ஒருங்கிணைப்பச் செய்தல் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் இயங்கிவருகின்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் 24 மணி நேரமும் இயங்கிவருகின்ற 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மேற்படி மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களிடம் சமர்ப்பிக்கப்படும் நேரடியான கோரிக்கைகள் தொடர்பில் இந்த உதவிச் சேவை ஆற்றப்படுகின்றது. இதன் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளவியல் சமூக பிரிவு இந்நடவடிக்கைககளை ஒருங்கிணைப்பு செய்தல், தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், வழிநடாத்தல் மற்றும் ஒழுங்குறுத்தலை மேற்கொள்கின்றது.

கொவிட் 19 தொற்று அச்சுறுத்தல் கடுமையாக பரவியிருந்த காலப்பகுதியில் மேற்படி சேவையின் கீழ் 1929 சேவைக்கு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளில் உளவியல் சமூக பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் 363 தொடர்பில் உளவியல் சமூக உதவிகள் வழங்கப்பட்டன. அதன் கீழ் ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரம் வழங்கல், சிறுவர்கள் மற்றும் பெற்றோர் பிரிந்துள்ள குடும்பங்களை (ஊரடங்கு காரணமாக) ஒன்றிணைத்தல், பொருளாதார அசௌகரியங்களைக் கொண்ட குடும்பங்களை அரச, தொண்டர் அமைப்புக்கள் மற்றும் ஆட்களினால் அமுல்படுத்தப்பட்டிருந்த நிவாரண சேவைகளுடன் தொடர்புபடுத்தல், மனஅழுத்தல் உட்பட ஏனைய உளவியல் சிக்கல்களுக்கு ஆலோசனை சேவைகளை பெற்றுக் கொடுத்தல், மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான சேவை பெறுநர்களை உரிய மருத்துவப் பிரிவுகளிடம் வழிநடாத்தல் போன்ற பல துறைகள் ஊடாக உதவிச் சேவைகளை பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக சூம் மற்றும் மைக்ரோசொப்ட் ரீம் வசதிகள் மூலம் உளவியல் முதலுதவி வழங்குதல், இணையத்தள குற்றச் செயல்களை தடுத்தல் தொடர்பில் விசேட பயிற்சி செயலமர்வுகள் பல இச்சேவையூடாக அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவையின் கீழ் தற்போது நாட்டில் ஆலோசனை, உளவியல் சிகிச்சை மற்றும் உளவியல் சமூக உதவிச் சேவைகளை பேணிவருகின்றஅரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசாங்க வைத்தியசாலைகள் போன்றவற்றின் தகவல்களை உள்ளடக்கிய தகவல் முறைமையொன்று வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இதனை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் இணையத்தளத்தில் வெளியிடத் தேவையான நடவடிக்கைகள் தற்போது துரிதமாக ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. சகல ஊடக நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுக்கு மேற்படி தகவல்களை பெற்றுக் கொடுக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு இதன் மூலம் முடியுமாயிற்று.

மேலும் சிறுவர்களின் உச்சளவான நல்ல நிலைத்திருத்தலுக்காக நடவடிக்கை மேற்கொள்ளும் சகல அலுவலர்கள், நிறுவனங்கள் மற்றும் உளவியல் சமூக உதவிச் சேவைகளை ஆற்றுவதற்கான உரிய தொழில்வல்லுனர்களை சம்பந்தப்படுத்திக் கொண்டு மாவட்ட மட்டத்தில் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலை எதிர்காலத்தில் நடாத்த இந்தத் தேசிய சேவையின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது. உளவியல் சமூக உதவிக்கான 'தேசிய தரவு முறைமை' யை தயார் செய்வதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'சாரபெஸ' உளவியல் சமூக சம்பவக் கற்கை கையேடு




சிறுவர் பாதுகாப்பின் முன்னோடிகளுக்காக சமர்ப்பிக்கப்படும் சம்பவக் கற்கைத் தொகுப்பு பின்வரும் 09 தலைப்புக்களின் ஊடாக 70 சம்பவக் கற்கைகளைக் கொண்ட கையேடாகும். இதன் இலத்திரனியல் பிரதியும் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இது சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி கருவியாக பயன்படுத்தும் நோக்கத்துடன் தயார் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு நிலைமைகள் மற்றும் நிறுவனங்களில் இடம்பெற்ற சிறுவர்

துஂபிரயோகங்களின் போது சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளவியல் சமூக அலுவலர்கள் மேற்கொள்ளும் நல்ல நடைமுறைகள் தொடர்பிலான சம்பவக் கற்கைகளை உள்ளடக்கியதாக கையேடு தயார் செய்யப்பட்டுள்ளது. இக்கையேடு பின்வரும் துறைகளை உள்ளடக்கியுள்ளது.

- சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை மையமாகக் கொண்டு உளவியல் சமூக தலையீடு.
- பகல்நேர அரவணைப்பு நிலையங்களை மையமாகக் கொண்டு உளவியல் சமூக தலையீடு.
- முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை மையமாகக் கொண்டு உளவியல் சமூக தலையீடு.
- சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு மற்றும் நல்ல பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையிலான தொடர்பு.
- திடீர் அனர்த்த நிலைமைகளின் போது உளவியல் சமூக தலையீடு.
- கரையோர வலயயத்தை மையமாகக் கொண்டு உளவியல் சமூக தலையீடு.
- பாதிக்கப்பட்ட பாதுகாப்பற்ற ஓரங்கட்டப்பட்ட மற்றும் அச்சுறுத்தலான சிறுவர்களுக்கு உளவியல் சமூக தலையீடு.
- நல்லதொரு ஆசிரியர் மாணவர் உறவு.
- விசேட தேவைகளைக் கொண்ட சிறுவர்களுக்கு உளவியல் சமூக தலையீடு.

**கரையோரப் பிரதேசத்தில் உளவியல் சமூக தலையீடுகள்**

கரையோரப் பிரதேசங்களில் வாழும் சிறுவர்களின் பாதுகாப்புக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒருங்கிணைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அவ்வவ் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

**சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றி பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது, சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு தொடர்பில் ஆரம்ப ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்றது. நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்புக்குத் தேவையான ஆரம்ப தரவுகளும் சேகரித்து முடிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்படுகின்ற பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கான சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றிய கையேடு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 14,835 பிரதிகள் அச்சிடப்பட்டன. இக்கையேட்டைப் பயன்படுத்தி சிறுவர்களுக்கு எதிரான வன்முறை, தண்டனை வழங்குவதை குறைக்கும் நோக்கத்துடன ஆசிரியர்களை பயிற்றுவிப்பது மேற்கொள்ளப்படுகின்றது.

**சிறுவர்களை தடுத்துவைத்துள்ள இல்லங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் பிள்ளைகள் மற்றும் பதவியணியினருக்கான உளவியல் சமூக பயிற்சி**

சிறுவர்களை தடுத்துவைத்துள்ள இல்லங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலை சிறுவர்கள் மற்றும் பதவியணியினருக்கு உளவியல் மற்றும் சமூக பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒருங்கிணைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**இலங்கையின் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான (சிறுவர் இல்லம்) வழிகாட்டல்கள் மற்றும் ஆகக் குறைந்த தரநியமங்களின் தொகுப்பு**

இலங்கையினுள் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் வாழும் சிறுவர்களின் உச்சளவான நலன்புரிக்காக நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் முக்கியமான விடயமாகும். அதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் இலங்கையில் சிறுவர் அரவணைப்பு நிலையங்களுக்கான வழிகாட்டல்கள் மற்றும் ஆகக் குறைந்த தரநியமங்களைக் கொண்ட தொகுப்பின் வரைவு தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**இலத்திரனியல் மற்றும் அச்சு அம்சங்கள் (சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், கையேடுகள்)**

சிறுவர் துஃஸ்பிரயோகத்தை தடுத்துக் கொள்வதற்காக பல்வேறு தொணிப்பொருள்களையும் பயன்படுத்திக் கொண்டு துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் போன்ற அச்சு வெளியீடுகளை தயார் செய்வதாகும்.

2020 ஆம் ஆண்டில் சுவரொட்டிகள் மற்றும் கோப்பு உறைகள் அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளன.

1. "நல்ல தொடுதல் மற்றும் கெட்ட தொடுதல்" பற்றிய சுவரொட்டிகள் 15,500 அச்சிடப்பட்டன. (படம் 01)
2. "பாதுகாத்துக் கொள்வது எவ்வாறு என்பதை நான் அறிவேன்" 15,500 சுவரொட்டிகள் அச்சிடப்பட்டுள்ளன. (படம் 02)
3. பாடசாலை சிறுவர்களுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி மற்றும் 1929 தொலைபேசிச் சேவை பற்றி விழிப்புணர்வூட்டும் 10,000 கோப்பு உறைகளும் அச்சிடப்பட்டுள்ளன. (படம் 03)
4. "சிறுவர் துஃஸ்பிரயோகத்தை இனங்காணல், தடுத்துக் கொள்ளல் மற்றும் முகாமைத்துவம்" நூல் மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டன. சிங்களம் - 5000, தமிழ் - 3000 மற்றும் ஆங்கிலம் - 2000 என்ற வகையில்.(படம் 04)
5. "சிறுவர் கடத்தலை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கு பயிற்சிப் பாடநெறி, கற்றல் நடவடிக்கைத் தொகுப்பு மற்றும் கருவிகள்" (நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்குக்கு அமைய சிறுவர்கள் உடல் தண்டனை, மன

அழுத்தம், பாலியல் மற்றும் வேறு வகையிலான துஸ்'பிரயோகத்திற்கு, சட்டவிரோத வாணிப நடவடிக்கைகளுக்கு சிறுவர்களைப் பயன்படுத்திக் கொள்ளல் (சிறுவர் கடத்தல்) சிறுவர் ஊழியர்களாக சிறுவர்களைப் பயன்படுத்த மற்றும் பாரபட்சம் காட்டலுக்கு ஆளாவதை முற்றாக ஒழிப்பதற்கான வேலைத்திட்டமாக இது தயார் செய்து அச்சிட்டு முடிக்கப்பட்டது. (படம் 05)

6. 2021 கடமை தினக்குறிப்பு அச்சிடல் (படம் 06)







(படம் 01) (படம் 02)




(படம் 03)







(படம் 04)








(படம் 05)




(படம் 06)

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் www.childprotection.gov.lk அபிவிருத்தி செய்யயப்படுகின்றது. உத்தியோகபூர்வ இணையத்தளம் முறையாக இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மென்மேலும் விளைதிறன்மிக்கவாறு தகவல்களை பொது மக்களுக்கு வழங்குவதற்காக புதிய இணையத்தளம் ஒன்றை தயார் செய்வதானது,AFFNOதனியார் நிறுவனத்தினால் சமூக சேவையொன்றாக மேற்கொள்வது முன்னெடுக்கப்பட்டது.




**சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினம்**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கு அமைய சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சர் திருமதி சுமேதா ஜி. ஜயசேன அவர்களின் 08/1765/333/010 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தத்துவமுள்ளதாக்கப்பட்ட தினமான சனவரி 04 ஆம் திகதி சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினமாக பெயரிடப்பட்டதுடன், அன்று முதல் ஒவ்வொரு வருடமும் சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தினத்தை கொண்டாட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முறையும் இத்தினம் கொண்டாடப்பட்டது.

**சிறுவர் ஊழியத்துக்கு எதிரான தேசிய தினம்**

சிறுவர் ஊழியத்துக்கு எதிரான தினத்தைக் கொண்டாடுவதற்கு சிறுவர் ஊழியம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கௌரவ தவிசாளர் பேராசிரியர் முதித விதானபதிரன அவர்களின் விசேட செய்தியைக் கொண்டதாக சிறுவர்கள் மற்றும் பெற்றோரை விழிப்புணர்வூட்டும் வீடியோ தொகுப்பொன்ற வடிவமைக்கப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது.

**உலக சிறுவர் தினம்**

உலக சிறுவர் தின தேசிய நிகழ்வு "எமது நாடு – எமது கைகளினால்" எனும் தொணிப்பொருளின் கீழ் 'அபேகம' வளவில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம அமைச்சர் கௌரவ மகிந்த ராஜபக்' அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. இதன் போது சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் பாடசாலை சிறுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயத்தினரை அறிவுறுத்தும் கண்காட்சியொன்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நடாத்தப்பட்டது.

உலக சிறுவர் தின தேசிய வைபவத்தை முன்னிட்டு "அபேகம" வளவில் நடாத்தப்பட்ட நடமாடும் கண்காட்சி





**சர்வதேச சிறுமியர் தினம்**

அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற சர்வதேச சிறுமியர் தினத்தை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் 25 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்தல்**

இலங்கையில் பல்வேறு நிறுவனங்களினாலும் கல்விக் கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மேற்படி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு அமைய தேசிய சிறுவர்

பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி தொடர்பில் அறிவுறுத்தும் கல்விக் கண்காட்சிக் கூடங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. 2020.02.22 ஆம் திகதி "பொது ஜன சரணி" நடமாடும் கண்காட்சி எம்பிலிபிட்டியவில் நடாத்தப்பட்டது. 2020.10.01 ஆம் திகதி உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நடமாடும் கண்காட்சியொன்று பத்தரமுல்லை அபேகம வளவில் நடாத்தப்பட்டது.

**இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்**

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தகவல்களை ஊடகத்துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து சமுதாயத்தினருக்குக் கொண்டு செல்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. அதற்காக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான ஊடக அறிவித்தல்களை ஊடகங்களுக்கு வெளியிடுதல் மற்றும் விடயரீதியான அம்சங்கள் தொடர்பிலான ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடாத்துவதும் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்கள் பிரதேச வானொலிச் சேவைகள் மூலம் "சிறுவர் பாதுகாப்பு பற்றிய" நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தினார்கள். இதற்கு மேலதிகமாக அதிகாரசபையின் அலுவலர்களின் பங்கேற்புடன் வெகுசன ஊடகங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களின் வளப் பங்களிப்பு வழங்கப்பட்ட வெகுசன ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் கல்வி வழங்குவதன் கீழ் ஊடகங்கள் மூலம் சிறுவர்கள், சமுதாயம், தொழில்வல்லுனர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். இந்த முறையியலை பயன்படுத்துவது குறிப்பாக பின்பற்றப்பட்டது நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் காரணமாகவாகும். மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 01 | 2020.03.05 ஆம் திகதி தாமரைத் தடாகத்தில் நடைபெற்ற "புஞ்சி பரிகல்பகயன்" நிகழ்ச்சிதிதட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு பற்றி உரையாற்றினார். |
| 02 | 2020.03.10 ஆம் திகதி செனல் ஐ தொலைக்காட்சி அலைவரிசை –"ரைஸ் என்ட் சையின்" நிகழ்ச்சியில் பங்குபற்றியமை. |

| | |
|---|---|
| 03 | 2020.03.30 ஆம் திகதி தெரண தொலைக்காட்சி அலைவரிசை –"எய" நிகழ்ச்சியில் பங்குபற்றியமை. |
| 04 | 2020.03. தெரண தொலைக்காட்சி அலைவரிசை –"பிக் போகஸ்" நிகழ்ச்சியில் பங்குபற்றியமை |
| 05 | 2020.04.10 ஆம் திகதி தேசிய ரூபவாஹினி அலைவரிசையில் நுகசெவண நிகழ்ச்சியில் பங்குபற்றியமை |
| 06 | 2020.05.02 சுவர்ணவாஹினி செய்திகள் |
| 07 | 2020.05.21 ஆம் திகதி ரூபவாஹினி கொவிட் 19 நிகழ்ச்சியில் பங்குபற்றியமை |
| 08 | 2020.06.05 ஆம் திகதி மன்றக் கல்லூரியில் நடைபெற்ற சிறுவர் பாதுகாப்பு பற்றிய நிகழ்வில் விரிவுரையாற்றியமை |
| 09 | 2020.07.10 ஆம் திகதி சிறுவர்கள் தொடர்பில் இடம்பெறுகின்ற சைபர் குற்றச்செயல்கள் தொடர்பில் சன்னஸ்கலவுடான கலந்துரையாடல் |
| 10 | 2020.07.22 ஆம் திகதி சைபர் பாதுகாப்பு பற்றிய ஒன்லையின் பாடநெறியை அமுல்படுத்தல் |
| 11 | 2020.08.17 ஆம் திகதி தெரண பிக் போகஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றல் |
| 12 | 2020.09.04 ஆம் திகதி நெத் எவ்எம் 'பெலும்கல'நிகழ்ச்சியில் பங்கேற்றல் |
| 13 | 2020.10.01 ஆம் திகதி ரீ.என்.எல். தொலைக்காட்சி சேவையில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சியில் பிரதித் தவிசாளர் திருமதி சுஜாதா அழஹப்பெரும அவர்கள் பங்கேற்றமை. |
| 14 | 2020.10.25 ஆம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆங்கில சேவையின் Straight from the Heart நிகழ்ச்சியில் பங்கேற்றமை |


LIVE






BIG FOCUS
BIG FOCUS
වත්මන් සමාජයේ දරුවා සුරක්ෂිතද?
LIVE
11:37


2020/09/04
ඔබේ දරුවාට SEX ගැන කියා දෙමුද?


Save the Children
World Vision
leads
LAUNCH
FREE INTERACTIVE ONLINE COURSE
CYBERSAFETY
FOR KIDS (13-18 years)
HOW DO YOU ASSURE YOUR CHILD'S ONLINE EXPERIENCE IS SAFE AND SECURE?
22nd JULY 2020
1600hrs - 1700hrs (IST), Colombo, Sri Lanka (UTC/GMT+5.5)
LIVE
@ethaksalawa.moe
MODERATOR:
FOR ANY INQUIRIES PLEASE CONTACT PETRICIA ON 0773187920

**நாளாந்த பத்திரிகைகளில் சிறுவர் துʻஸ்பிரயோகங்கள் அறிக்கையிடப்படுவதை ஒழுங்குறுத்தல்**

நாளாந்த பத்திரிகைகள் மூலம் அறிக்கையிடப்படும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய செய்திகளை வெளியிடும் போது ஆள் அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் சிறுவர்கள் தொடர்பிலான செய்திகள், சம்பவங்கள் உள்ளனவா என்பது ஒழுங்குறுத்தப்படுகின்றது. மேலும் தார்மீகமற்ற செய்தி வெளியீடு பற்றியும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**செய்தி அறிவித்தல்கள்**

1. தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கையை அமுல்படுத்தல் (2020.01.06)
2. சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டத்தை தயார் செய்தல் (2020.01.08)
3. இணையத்தளம் ஊடாக சிறுமியரை பயமுறுத்தி, பாலியல் துʻஸ்பிரயோகம் செய்த 07 பேர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைது செய்யப்பட்டமை. 2020.02.20
4. சமூக வலைத்தளங்கள் ஊடாக பரிமாற்றிக் கொள்ளப்படும் சுமார் 06 வயது சிறுமியை பாலியல் துʻஸபிரயோகத்திற்கு உட்படுத்தும் வீடியோ பற்றிய தகவல்களை அறிந்திருப்பின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறியத்தரவும் (2020.02.28)
5. பெற்றோர் வெறுக்கும் சிசுக்களை பொறுப்பேற்றுக் கொள்ள, ஒவ்வொரு மாகாணத்திற்கும் விசேட வைத்தியசாலை அறையொன்றை கொடுக்கவும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அரசிடம் கோரிக்கை (2020.03.06)
6. சிறுவர் பகல்நேர பராமரிப்பு நனிலயங்களில், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் சிறுவர்களை கொரொனா தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல் (2020.03.13)
7. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசாரணைகளுக்கு தடை ஏற்படுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை. (2020.06.10)
8. 12 வயது ஆண் பிள்ளையொருவரை துʻபிரயோகத்திற்கு ஆளாக்கிய மற்றொரு ரியுசன் ஆசிரியர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைது செய்யப்பட்டார். (2020.08.19)
9. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் 2020 சனசரி மாதம் முதல் சுபீட்சத்தின் நோக்குடன் புதிய வேலைத்திட்டம் (2020.08.20)
10. பராயமடையாத ஆண் பிள்ளை ஒருவரை துʻபிரயோகம் செய்த நடன ஆசிரியர் ஒருவர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைதுசெய்யப்பட்டமை (2020.08.24)
11. 15 வயது சிறுமியொருவரை கர்ப்பமடையச் செய்துவிட்டு தப்பியோடியிருந்த சந்தேக நபர் ஒருவர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைதுசெய்யப்பட்டமை (2020.08.26)

12. கொவிட் 19 தொற்று நோய் காலப்பகுதியில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பல்வேறு புதிய உளவியல் சமூக சேவைகள் (2020.09.02)
13. தரம் 5 இல் கல்வி பயிலும் சிறுமியர் மூவரை து'ஸ்பிரயோகத்திற்கு ஆளாக்கிய பாடசாலை காவலாளி ஒருவர். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கைதுசெய்யப்பட்டமை (2020.09.03)
14. பராயமடையாத ஆண் பிள்ளை ஒருவரை குரூரமாக நடாத்திய அதிபர் ஒருவருக்கு 02 வருட கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை. (2020.09.14)
15. பராயமடையாத ஆண் பிள்ளை ஒருவரை கடும் பாலியல் து'பிரயோகத்திற்கு ஆளாக்கிய ஒருவருக்கு 10 வருட கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை (2020.09.17)
16. கொவிட் 19 காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டங்களை பிரச்சாரம் செய்வது தொடர்பாக (2020.11.06)
17. 1929 இலங்கை சிறுவர் பாதுகாப்பு செயலியை வெளியிடல் (1929 Sri Lanka Child Protection App) (2020.11.20)

**சிறுவர் பாதுகாப்பு பற்றி சமூக வலைத்தளங்கள் ஊடாக தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தகவல்கள் மற்றும் ஊடகப் பிரிவினால் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்கள் சிறுவர்களுக்கும், சமுதாயத்தினருக்கும், கல்விமான்களுக்கும், தொழில்வல்லுனர்களுக்கும் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்வோருக்கும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பேஸ்புக் மற்றும் யூ ரியுப் கணக்கை இற்றைப்படுத்துவதும் மேற்கொள்ளப்பட்டது.

**சிறுவர் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டுவதற்காக விவரண நிகழ்ச்சிகள் மற்றும் குறும் திரைப்படங்களை தயார் செய்தல்.**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தகவல் மற்றும் ஊடகப் பிரிவினால் முதற் தடவையாக இப்பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த தயாரிப்புக்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மனித வளங்களும், தொழில்நுட்பமும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டு இவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 01 | சிறுவர்களின் பங்கேற்பின் மூலம் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக "அமல் பிசோய் மாய்" எனும் விவரண நிகழ்ச்சி. |

| | |
|---|---|
| 02 | சிறுவர்களின் பங்கேற்பு மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக “ பொத்தய் மமய்” விவரண நிகழ்ச்சி. |
| 03 | சிறுவர் ஊழியம் பற்றிய குறும் திரைப்படம். |
| 04 | சிறுவர் பாலியல் துஂஸ்பிரயோகம் மற்றும் சட்டங்கள் பற்றிய குறும் திரைப்படம். |
| 05 | “நாம் பிள்ளைகள் உணரும் வகையில் அன்பு செலுத்துவோம்” எனும் உளவியல் சமூக தலையீடு பற்றிய குறும் திரைப்படம். |
| 06 | குடும்ப உறவு பாதிக்கப்படுவதன் மூலம் சிறுவர்களுக்கு ஏற்படும் உளவியல் தாக்கம் மற்றும் சமூக பொறுப்பை உறுதி செய்வதற்காக “பினிமல்” தொலைக்காட்சி நாடகம் தயார் செய்யப்பட்டமை. |
| 07 | 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையை பிரச்சாரம் செய்வதற்காக “தருவெக் வெனுவென் மினிசெக் சிடீ” கீதம் தயார் செய்யப்பட்டமை. அனுசரணை ஜுழசடன ஏளைழைெ நிறுவனம். |
| 08 | சிறுவர்களுக்கு எதிரான சைபர் குற்றச் செயல்களை தடுப்போம. |











**சிறுவர் பாதுகாப்பு பற்றிய ஒன்லையின் விளையாட்டு செயலியை வடிவமைத்தல்**

2020 ஆகஸ்ட் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய ஒன்லையின் விளையாட்டு செயலியை வடிவமைக்கும் பணி முன்னோடி நடவடிக்கையொன்றாக சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவை சமூகமயப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. சேவ் த சில்ரன், வேர்ல்ட் விசன், சர்வோதய, லீட்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நிதிக் கொடையின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய ஆரம்ப கட்ட கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.





**1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை**

இப்பிரிவு 2010 யூலை 22 ஆம் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வளவில் தாபிக்கப்பட்டது. கட்டணம் அறவிடாது 24 மணி நேரம் முழுவதிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய 03 மொழிகளிலும் இச்சேவை இயங்கிவருகின்றது.

இச்சேவையை மென்மேலும் விளைதிறன்மிக்கதாக்கவும், வினைத்திறன்மிக்கதாக்கவும் 1929 இலங்கை சிறுவர் பாதுகாப்பு செயலி(அப்லிகேசன்) 2020.11.20 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக

அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இதன் மூலம் சிறுவர்கள் மற்றும் சமுதாயத்திற்கு கற்புல, செவிப்புல மற்றும் எழுத்துமூலமாக சிறுவர் துஸ்‘பிரயோகங்கள் தொடர்பிலான சாட்சிகளுடனான முறைப்பாடுகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கும் வாய்ப்புக் கிடைக்கும். 2020 ஆம் ஆண்டில் இந்தத் தொலைபேசி இலக்கத்திற்கு 8,165 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

**1929 இலங்கை சிறுவர் பாதுகாப்பு செயலி (அப்லிகேசன்)**

1929 கையடக்கத் தொலைபேசி செயலியை ஒழுங்குசெய்யும் பணி புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முதல் தடவையாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டது. Save the children international, World Vision, Sarwodaya fuston and Ledsஆகிய நிறுவனங்களின் கொடையொன்றாகவும், முன்னோடி நிகழ்ச்சித்திட்டமாகவும் இது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் குறுஞ் செய்தி, ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு மூலம் முறைப்பாடுகளை சாட்சியங்களுடன் வினைத்திறனுடன் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் ஆற்றல் உள்ளது.





அதிகாரசபைக்கு முறைப்பாடுகளை சமர்ப்பிக்கக்கூடிய ஏனைய முறைகள்

01. அதிகாரசபைக்கு நேரடியாக வருகை தந்து சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள்.
02. கடிதங்கள் மூலம்
03. பெக்ஸ் மூலம் : இலக்கம் 0112778767
04. மின்னஞ்சல் மூலம் (e-mail) : chairman.ncpa@gmail.com
05. இணையத்தள சிறுவர் துஷ்‘ஸ்பிரயோகங்களுக்கான தனியான றாயவளயிீ இலக்கம் உள்ளது – 0773220032

**முறைப்பாடுகளை வழிநடாத்தும் வழிகாட்டியை தயார் செய்தல்**

இந்த வழிகாட்டி 2020 ஆம் ஆண்டு முதற் தடவையாக தயார் செய்வது மேற்கொள்ளப்பட்டது. மேலும் அதிகாரசபையின் விசாரணை நடவடிக்கைகள் மற்றும் முறைப்பாடுகளை வழிநடாத்தும் பணிகளை இலகுபடுத்தும் நோக்கத்துடன் இந்த வழிகாட்டல் தொகுப்பு அதிகாரசபை சட்டத்திற்கு ஏற்புடையதாகவும், 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் சட்டக் கோவை, தண்டனைச் சட்டக்கோவை மற்றும் சிறுவர்கள் தொடர்பிலான ஏனைய சட்டங்களையும் கவனத்தில் கொண்டு தயார் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் 18 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிக்கையிடப்படுகின்ற சகல முறைப்பாடுகளின் போதும் 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்துக்கு அமைய அதிகாரசபையின் அலுவலர்கள் எவ்வாறு தலையீடு செய்தல் வேண்டும்? எவ்வளவு காலத்தில் தலையீடு செய்ய வேண்டும்? யார் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்? வரையறைகள் என்ன? போன்றன முறைப்பாட்டு நடவடிக்கைமுறை வழிகாட்டல் தொகுப்பில் உள்ளடங்குகின்றன.

இந்தத் தொகுப்பு சிறுவர் துஷ்பிரயோக விசாரணை செயன்முறை பற்றிய கோட்பாடுகள் தொடர்பான அத்தியாயம், அதிகாரசபையின் அவ்வவ் பிரிவுகள் எவ்வாறு தலையீடு செய்ய வேண்டும் என்பதை உள்ளடக்கிய அத்தியாயம், பொதுவான ஆலோசனைகளை கொண்டுள்ள அத்தியாயம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முறைப்பாடுகளை வழிநடாத்தல் அல்லது விசாரணை செய்வதற்கு தத்துவமளிக்கும் கண்காணிப்பு, அமுல்படுத்தும் சகல அலுவலர்களுக்கும் இந்த வழிகாட்டல் தொகுப்பு தத்துவமுள்ளதாகும்.




விசாரணை மற்றும் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| 01 | விசாரணை பிரிவுக்கு கிடைத்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 745 |
| 02 | விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 485 |
| 03 | மூடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 260 |
| 04 | சாட்சிகளின் தகவல்களை வழக்கும் உத்தரவுகளை முறைப்பாடுகளுக்கு சமர்ப்பித்தல் | 24 |
| 05 | இந்த ஆண்டில் நடாத்தப்பட்டுள்ள சம்பவக் கற்கைகளின் எண்ணிக்கை | 28 |
| 06 | அதிகாரசபைக்கு வருகைதந்து சமர்ப்பித்த முறைப்பாடுகளை பொறுப்பேற்றல | 228 |

| | |
|---|---|
| ● | நாடு முழுவதிலும் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்துகொள்ளும் ஒன்பது பிரிவுகளை மாகாண மட்டத்தில் ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| ● | நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான சட்டங்களை அமுல்படுத்துவதுடன் சம்பந்தப்படுகின்ற பொலிஸ் அலுவலர்களை பயிற்றுவித்தல். |
| ● | ஒன்பது மாகாணங்களுக்கும் சிறுவர் நீதவான் நீதிமன்றங்கள் 09 ஐ தாபிக்க அரசாங்கத்திற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. (பத்தரமுல்லை மற்றும் யாழ்ப்பாணம் சிறுவர் நீதவான் நீதிமன்றங்கள் இரண்டு மாத்திரம் தற்போது இலங்கையில் இயங்கிவருகின்றன.) |
| ● | ஒன்பது மாகாணங்களுக்கும் 9 சிறுவர் மேல் நீதிமன்றங்களைத் தாபிக்க அரசாங்கத்திற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது (அநுராதபுரம் சிறுவர் மேல் நீதிமன்றம் மாத்திரம் தற்போது இயங்கிவருகின்றது.) |
| ● | சிறுவர் கருமபீடங்கள் ஒன்பதை மாகாண மட்டத்தில் ஏற்படுத்த பிரேரிக்கப்பட்டுள்ளது. |
| ● | சம்பவ மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி பாதிக்கப்பட்ட சிறுவர்களை தகுந்த பாதுகாவலர்களிடம் பொறுப்பளிக்கத் தேவையான உதவிகளை வழங்குதல். |
| ● | சிசுக்களை பொறுப்பேற்றுக் கொள்ளும் 9 கரும பீடங்களை ஏற்படுத்த அரசாங்கத்திற்குப ் பிரேரிக்கப்பட்டுள்ளது. |

**சட்டத்தை அமுல்படுத்துவதன் முன்னேற்றம்**

| | | |
|---|---|---|
| 01 | மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 8165 |
| 02 | விசாரணை நடைபெறுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | |
| 03 | தற்போது விசாரணை நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 4120 |
| 04 | விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் | |
| 05 | குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 3030 |
| 06 | இந்த முறைப்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட சிறுவர்களில் தமது குடும்பத்தினருடன் வாழும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை | 5667 |
| 07 | பாதிக்கப்பட்ட சிறுவர்களில் தமது குடும்பத்திலிருந்து விலகியுள்ள எண்ணிக்கை | 528 |
| 08 | தமது கற்கை நடவடிக்கைகளின் (முறையான மற்றும் ∴ அல்லது முறைசாரா) முன்னரைப் போன்று ஈடுபடுகின்ற எண்ணிக்கை விகிதமாக<br>(பாடசாலை செல்லாத எண்ணிக்கை 643, இது விகிதமாக 8%) | 92% |
| 09 | முறையான பயிற்சியைப் பெற்றுள்ள ஆட்களினால் உளவியல் சமூக உதவிகள் வழங்கப்பட்டுள்ள முறையான பயிற்சியைப் பெற்றுக் கொண்ட ஆட்களினால் உளவியல், சமூக உதவி வழங்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை | 1105 |

**1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை மற்றும் நேரடியான முறைப்பாடுகளுக்கு உளவியல் சமூக உதவிச் சேவைகளை பெற்றுக் கொடுதல், கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் பணிகள்**

1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை மற்றும் நேரடியாக அறிக்கையிடப்படுகின்ற முறைப்பாடுகளை மாவட்ட, பிரதேச அலுவலர்களிடம் ஆற்றுப்படுத்தல் மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் சிறுவர்களின் உச்ச நலனுக்காக பல்வேறு நிறுவனங்கள், சேவைகள் மற்றும் அலுவலர்களிடம் சமர்ப்பித்தல், தேவையான ஆலோசனை, வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுப்பது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

2020 உளவியல் சமூக பிரிவுக்குக் கிடைத்த 1929 முறைப்பாடுகள் பற்றிய முன்னேற்றம்

| | | |
|---|---|---|
| • | பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 1105 |
| • | ஆரம்ப அறிக்கை கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 542 |
| • | ஆரம்ப அறிக்கை கிடைக்காத முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 563 |
| • | உளவியல் சமூக தலையீடுகள் வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 129 |
| • | தொடர்ந்தும் பின்னாய்வு மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 413 |
| • | சிறுவர்களுக்கான ஆலோசனை சேவைகளை வழங்கியமை | 50 |
| • | தொலைபேசி மூலம் உளவியல் சமூக தலையீடுகளை வழங்கியமை மேலும், | 732 |
| • | வீடியோ சாட்சியங்களை பதிவு செய்வதற்காக சிறுவர்களை ஆயத்தப்படுத்தல் மற்றும் ஒளிப்பதிவு செய்வதை கண்காணிப்புச் செய்தல | 91 |
| • | சம்பவ கருத்தரங்குகளில் பங்கேற்றல் | 21 |

**சிறுவர் பாதுகாப்பு அலுவலரின் விசாரணை அறிக்கையை அறிமுகம் செய்தல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 1929 அல்லது வேறு முறையில் கிடைக்கின்ற முறைப்பாடுகளின் தகவல்கள் போதியதாக இல்லாத போது மேற்படி தகவல்கள் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன், முறைப்பாடு அல்லது தகவல் பற்றி சிறுவர் பாதுகாப்பு அலுவலரின் விசாரணை சிபாரிசு சட்டத்தை தத்துவமுள்ளதாக்கும் பிரிவுக்கு அனுப்பப்படும். இந்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் மேற்படி தகவல்களை சரியாகவும், வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் அனுப்புவதற்கு விசேடமான படிவமொன்று 2020 யூன் மாதம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் அறிமுகம் செய்யப்பட்டது. இது சிறுவர் துஸ்பிரயோக விசாரணை அறிக்கை என்றழைக்கப்படுகின்றது. இது இந்த ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அறிக்கை மாதிரியாகும்.

**சம்பவ கருத்தரங்கு மதிப்பீட்டு அறிக்கை**

நாடு முழுவதிலும் சிறுவர்கள் தொடர்பில் நடாத்தப்படுகின்ற சம்பவ கருத்தரங்குகளின் போது அதன் முன்னேற்றத்தை அதிகாரசபைக்கு அறிக்கையிடுவதற்காக இந்த அறிக்கை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**ஆரம்ப அறிக்கை**

பிரதேச பொலிஸ் நிலையங்களுக்கு அறிக்கையிடப்படுகின்ற சிறுவர் து‘ஸ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகளின் ஆரம்ப அறிக்கை 24 மணி நேரத்திற்குள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கட்டாயமாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

இந்த ஆண்டில் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸ் மாஅதிபர் 2020.08.31 ஆம் திகதி இலங்கை பொலிஸின் 494 பொலிஸ் நிலையங்களுக்கும் CRTM 1978 எனும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதற்கமைய ஒவ்வொரு பொலிஸ் நிலையத்தினாலும் ஆரம்ப அறிக்கைகள் எமது அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இந்த ஆண்டில் கிடைத்துள்ள ஆரம்ப அறிக்கைகளின் எண்ணிக்கை 222 ஆகும்.

மேற்படி ஆரம்ப அறிக்கைகள் ‘பொலிஸ் முறைப்பாடுகளை இற்றைப்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல் Kiwik’(**Police** Complaint update monitoring system/ Police **CUMS**)ஊடாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் 2020 யூலை மாதம் முதல் ஒழுங்குறுத்துவது ஆரம்பிக்கப்பட்டது.

**சிறுவர் துஃஸ்பிரயோகங்களின் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்தல்**

சிறுவர் துஃபிரயோகங்கள் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்களின் சாட்சியங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் விசேட பிரிவொன்று இயங்கிவருகின்றது. 1999 இன் 32 ஆம் இலக்க சாட்சியங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கமைய துஸ்பிரயோகத்திற்கு ஆளாகும் ஒரு சிறுவனின் சாட்சியங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்து அதனை நீதிமன்றத்தில் சமா்ப்பிப்பது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டு

| | | |
|---|---|---|
| 01 | அதிகாரசபைக்கு கிடைத்த வீடியோ சாட்சியங்களுக்கான கோரிக்கைகள் | 156 |
